www.tamilarangam.net

# சமர்

தொகுதி-8 இலக்கம் : 2



தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்”

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# பெண்

தொகுதி : 8 இலக்கம் : 2

2003

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
**மட்டக்களப்பு.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
இல.20, டயஸ் வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி இல: 065-2223297
Fax No : 065 - 2224657, E-mail : suriyaw@slt.lk

THE WOMAN - **A Journal Published by**
**Suriya Women's Development Centre,**
**No:20, Dias Lane,**
**Batticaloa.**

ஆசிரியை - விஜயலட்சுமி சேகர்

முன்அட்டை ஓவியம் - கலாசார குழு

அச்சகம் - கத்தோலிக்க அச்சகம்,
மட்டக்களப்பு.

விலை - 40/=



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுடன்......

மீண்டும் ஒரு இதழ் மூலம் தங்களைச் சந்தித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மலரும் எம் இதழ்களில் பெண்நிலை சார்ந்த சேதிகளை பல வடிவங்கள் ஊடாக உங்களுடன் பகிரும் நாம், எம்முடன் சேர்ந்து உங்கள் குரல்களும் இவ் இதழ் மூலம் பல காதுகளை எட்ட வேண்டும் என விரும்பு கிறோம்.

ஆகவே "பெண்களின் பிரச்சனை அது அவர்களின் பிரச்சனை", என தள்ளியிருத்தலோ, பெண்நிலைவாதம் - அது ஆண்களுக்கெதிரானது" எனும் கட்டுக்கதைகளோ இனி வேண்டாம்.

ஆண், பெண், எனும் பால் வேறுபாடுகளுக்கு பன்னெடுங்காலமாக சமூகம் வழங்கும் அந்தஸ்து வேறுபாடே இன்று பெண்கள் எதிர் கொள்ளும் பாரிய பிரச்சனைகளுக்கும், பெண்களது பாதிப்புக்கள் மனித உரிமை, உணர்வு மீறலாகும் என்பதை கவனத்தில் கொள்ளாமல் போவதற்கும் ஏற்படும் மானுட சிதைவுகளுக்கும் காரணமாய் உள்ளது. ஆகவே சமூகத்தின் அசமத்துவ போக்கை நாம் மாற்ற வேண்டும். இதை ஒருவரியில் இலகுவாக சொல்லிவிட முடியும். ஆனால் சொல்வதை நடைமுறைப்படுத்த... ஐக்கிய மாக... உணர்வுடன் கலக்க.. இறுதியில் பெண்நிலை வாதம் என்பது எமது அன்றாட வாழ்க்கை எனும் ஒரு நிலையை அனைவரும் அடைந்து.... சமாதானமான... சமத்துவமான... சந்தோசமான வாழ்க்கை வாழ... எடுக்கும் காலங்கள்... எதிர்கொள்ளும் சவால்கள்...

யுகங்களை விநாடிகளாக்குவதும்... சவால்களை சாதகமாக்குவதும், ஒருவருக்கொருவர் இடையேயுள்ள புரிந்துணர்வும்..... விட்டுக் கொடுப்பும்..., ஒன்று படுதலுமே இதற்காக நாம் ஆற்றும் பல செயற்பாடுகளில் ஒன்றே இச் சஞ்சிகை வெளியீடாகும். இவ் இதழ் மூலம் பல உள்ளங்களின் சிந் தனைகள் எம்முடன் இணைவது எமது நோக்கை அடைவதற்கான பலமும் பாலமும் ஆகும் என்று கூறிய தங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியை

www.tamilarangam.net

# உள்ளே..

- பெண்களை வன்முறைக்குட்படுத்தாத சமூகம்
- பெண் குழந்தையை விரும்பாத தந்தைமார்களே..
- இலவச இணைப்பு...
- வெளிவேலைகளை பெண்கள் இன்னும்...
- உயிர்ப்பு...
- அவனுக்கும்....
- மருத்துவிச்சி
- மீண்டும் ஓர் பிரவேசிப்பு
- தென்னாசிய பெண்களுக்கான ....
- புன்மை ...
- மண்டூர் அசோகாவுடன்....
- வானம் ஏன் மேலே போனது
- சமாதானத்துக்கான உலகப் பெண்கள் மாநாடு
- நானும் ஒரு மனுசியாய்
- போதை ஒரு கவசம்
- பாலும் சோறும் உண்ணத்தரும் அப்பா...
- நாக கன்னி
- காதல் சமாதி
- மாலிகா அமர்ஷேக் ....
- பெண்களை அறிதல் ....
- மடல் விடுதூது.....

www.tamilarangam.net

# பெண்களை வன்முறைக்கு உட்படுத்தாத சமூகம்

அணுவினிலும் பிரிவு வகுத்து, அதிசயமாக வாழ்க்கைப் பாங்கை நாகரிகம், விஞ்ஞானம் எனும் பாதையில், செறி கடலை நோக்கிப் பாய்ந்து ஓடும் சிற்றாறுகளாக எம் மானுட சமுகமாகிய ஊற்று பரந்துபட்ட வண்ணம் வீறு நடை போடுகின்றது. ஆயினும் தேசத்தினுடைய அங்கத்துவத்திலேயே முக்கிய பங்கு வகிக்கும் பெண்கள், தீப் பெட்டிகளான சமூகத்தில், தீக் குச்சிகளாகவே சங்கமித்த வண்ணமிருக்கின்றனர். எங்கெங்கிலும் வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், சீண்டல்கள் என பெண்களுக்கு எதிரான வன்முறை கள் உலகமெங்கிலும் விரிவுபட்டு உள்ளன.

இன்று உலகெங்கிலும் போர், பயங்கரவாதம், அமைதியின்மை என பல்வேறு நிர்க்கதிச் சூழலிலும், பெண்களைப் பறக்கும் பட்டமாக மட்டந்தட்டி சிறகடிக்கும், இச் சமூகத்தின் உள்ளாந்த பாதையில் சென்று நாமும் நோக் கின், பெண் சமூகத்திற்கும் வன்முறைகளுக்கும் இடையிலான ஒற்றுமைகள் பல தெட்டத்தெளிவாகும்.

ஆணுக்குப் பெண் சரி நிகர் உரிமை வேண்டுவதும், சமுதாயத்திலே தம்மீது பொறிக்கப்படும் துஷ்பிரயோக முத்திரைகளிலிருந்து விடுதலை கோருவதும் முற்றிலும் வேறுபட்டதாகவே தற்கால வன்முறைச் சமூகத்தில் கொள்ளவேண்டியுள்ளது. தற்காலத்திலே "சட்டங்கள் செய்வதும், பட்டங்கள் பெறுவதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்." என, எந்த உருவாக்க முமின்றி கல்வி, யுத்தி, பலம், தொழில், முயற்சி என பல துறைகளிலம் ஏற்றங் கொண்டு உலகை இயக்கும் இயந்திரத்துக்கு பெண்டிரும் உடமையாளிகள் ஆகிவிட்டனர். ஆயினும், பெண் எனும் உள்ளாந்த கருத்துத் தொனிப்பில் இழிவான எண்ணக் கோலங்கள் வர்ணஜாலம் காட்டுவது போல, பெண்க ளுக்கான சம அந்தஸ்து சம உரிமை என்பன சமூகத்திடையே இல்லாதாகி விட்டது.

இவை அத்தனைக்கும் அக்காலத்திலேயே பொன் மொழிகளாக பெரியோரால் பேணப்பட்ட பழமொழிகள் முதல் இக்காலப் பேச்சுவழக்கு

www.tamilarangam.net

வரை பெண்களை வன்முறைக்கு உட்படுத்தும் பாலமாகவே அமைவதை அவதானிக்க முடிகிறது. பெண் எனும் மகத்துவத்துக்கு உரியவள் - எண்ணம், சொல், செயல் எனும் அக-புற கண்ணோட்டங்கள் அனைத்திலும், குறிப்பாக ஆண் வர்க்கத்தினால் இம்சிக்கப்படுவதை நாம் நாள்தோறும் காண முடி கிறது. இது எமது சமூகரீதியாக மட்டுமன்றி, நாடளாவிய சர்வதேச மட்டத் திலும் கூட பரந்து பட்டுக்கிடக்கிறது. இவற்றையெல்லாம் நாம் "பெண்களுக்கு எதிரான வன்முறைகள்" எனும் பட்டியலிலேயே சேர்க்க வேண்டி உள்ள தால், பட்டியலின் விரிவு இன்னும் நீண்டு செல்கிறது.

சமுதாயத்திலே தலைகுனிந்து, பெருவிரல் பார்த்து, முடியைக் கோதி பின்னலிட்டு கட்டுப் பொம்மையாக நடக்கவேண்டிய பெண்டிர் குலம், தலை நிமிர எத்தணிக்குமிடத்து, இப் பொல்லாத சமூகத்தின் பார்வை மேலோங்கி நின்று விடுகிறது. கண்டதும் காணாததுமாக, உடையதும் இல்லாததுமாக, வாயினால் பேச்சளவில் உருவாக்கப்பட்ட பொம்மையானது, சமூக உறுப்பினர்களால் இடப்பட்ட ஐம்பொறிகளோடு சமூகத்திலே அன்றாடம் உலா வருவதை காணத்தக்கது. இவை நம் அன்றாட வாழ்வின் கண் சமூகத்து விழுமியமாக மாறி வருவது சிந்திக்கத்தக்கது.

இவற்றையெல்லாம் உற்று நோக்குமிடத்து, பெண்களை சமூகத்திலே வன்முறைக்கு உட்படா வண்ணம் பாதுகாக்கப்படும் நிலைமையை குடி யேற்ற வேண்டியது அவசிய நிகழ்வாகும். சங்ககாலம் தொடக்கம் இக்காலம் வரை பெண்களின் நிலையை யோசித்தால், புதியன புகுதலும், பழையன கழிதலும் நாகரிக விந்தையாகையால் காலப் போக்கிற்கேற்ப மாறுபட்டுச் செல்லும் பெண் சமுதாய நிலை தெட்டத் தெளிவாகும்.

இயற்கையோடு ஒன்றிய இல் வாழ்க்கை வாழ்ந்த சங்ககால மக்களிடையே, பெண்ணின சமுதாயமானது பிரச்சினைகளின் மத்தியில் சிக்குண்ட பாத்திரமாக உருவகிக்கப்படவில்லை. அக்கால நிலையில் பெண் களை வன்முறைப் பாதையில் செலுத்தாத நிலையைக் காண முடிகின்றது. தற்போது பத்தினித் தெய்வமாக நாம் வழிபட ஏதுவாகின்ற அக்கால சூழற்சித்தரிப்பின் படைப்பாகிய பெண்ணான கண்ணகி நீதிக்காகப் போராடி பெயர் பெற்றாளன்றி அநீதிக்காளாகவில்லை என்பது சிலப்பதிகார வரலாற் றுத் தெளிவு.

www.tamilarangam.net

தொடர்ந்துவந்த காலத்திலே, சமூகத்தினுடைய முக்கிய குடும்ப அலகாக திகழும் பெண்ணானவள், கண்மூடித்தனமான பல பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்பட்ட நிலையைப் பாரதியின் கவிதைகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். தேசத்துக்கு மட்டுமன்றி விடுதலையை பெண்ணினவாதத்துக்கும் கிடைக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துவதாக "மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்." எனும், மகாகவியினுடைய "மனைத் தலைவிக்கு வாழ்த்து," "பெண் விடுதலை". "பெண்கள் விடுதலைக் கும்மி", "பெண்மை", "புதுமைப் பெண்" எனும் கவிநயங்கள் எடுத்தியம்பத்தக்கன.

இற்றை வரை எம் உலகிலே எம் சமுதாயத்தில் வாழ்ந்த சாரதா அம்மையார், அன்னை திரேசா என்போர் காலத்திலும் கூட, பெண்கள் அடிமைப்பட்டம் கட்டப் பட்டவர்களாக சமூக ஒட்டுதலோ, கல்வி அறிவோஇன்றி தம் வாழ்வை மனைக்குளேயே கழிக்க வேண்டிய இழிநிலை காணப்படாமலில்லை. அக் காலத்திலும் கூட இக்காலத்தைப்போல பல் மருங்கிலும் பெண்களுக்கான முன்னுரிமை ஒழிப்பு, சுதந்திரப்பறிப்பு, உரிமைமறுப்பு என்பன பெண்கள் பாற்திணிக்கப்பட்ட வன்முறைகளாக கருதப்படத்தக்கன. எனினும், சர்வதேச ரீதியிலே மார்ச் 8ம் திகதியன்று "சர்வதேச மகளிர் தினம்" அமுல்படுத்தப் பட்டு கொண்டாடப்படுவது பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக் குக் கொண்டு வரத்தக்க: என்றென்றும் பெண்களை வன்முறைக்கு உட்படுத்தாத சமுதாயத்தினையே பெற எதிர் பார்க்கும் ஓர் முக்கிய எத்தணிப்பாகும்

"றீற்ரா", 'கிறிஷாந்தி" போன்ற சில ஆறாத காயத்தழும்புகள், எம் சமுதாயமத்தியில் நிலைகொண்டிருக்கவே செய்கின்றது. தற்காலத்திலே நடைபாதை தொடக்கம் தொழில் புரியும் இடம் வரையும் மகளிர்பாற் செலுத்தப்படும் பாலியல் சேட்டை, துஷ்பிரயோகங்கள் எம் சக பாலரின் தலையீட்டினால் ஓரளவில் மட்டுப்படுத்தப்படுவதை நிதம் காண முடியும்.

இவை தவிர பெண்கள் பால் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல சஞ்சிகைகள், மாத இதழ்கள் மூலமாக உலகம் தெரியாத பெண்களுக்கான

www.tamilarangam.net

பல உள்ளார்ந்த கருத்துக்கள் தெளிவான முறையில் முன்வைக்கப்படு கின்றன. பெண் சமூகத்தை அடிமை நிலையிலிருந்து கைதூக்கி எழுப்பவும், பெண்களை அடிமைப்பாதையில் செல்ல விடாது தடுக்கவும், பல பல பெண்கள் சம்பந்தமான தனியார் - அரச நிறுவனங்கள் தம் நோக்கை முன் னெடுத்துச் செல்கின்றன. மேலும் பல்வேறு பிரசுரங்கள் கருத்தரங்குகள், பத்திரிகைப் பக்கங்கள் என்பனவும் காலத்துக்குக் காலம் பெண்களை வன்முறையால் பீடிக்கும் சமுதாயத்துக்கும், அவ் அச்சுறுத்தலிலிருந்தும் பாதுகாக்கும் தற்காப்பு நடவடிக்கையாக அமைவதை கருத்திற் கொள்ள முடியும். பெண்வர்க்கத்தின் கண், சமுதாயம் வன்முறைகளை ஏற்படுத்தவோ, வன்முறைக்கு உட்படுத்தவோ, திணிக்கவோ, எத்தணிக்கவோ கூடாது எனும் கருத்துத் தொனிப்பே இவ்வாறான ஈடுபாடுகளை சுட்டி நிற்கின்றது அன்றி வேறில்லை.

"பெண்களை வன்முறைக்கு உட்படுத்தாத சமூகம்" எனும் ஓர் தெளிவான தலைப்பின் கீழே, நாம் உம்மத்தியில் பரந்துபட்டுக் காணப்படும் பல சீறல்களையும், கதறல்களையும் எடுத்துக் காட்ட வேண்டியது திண் ணமாகின்றது. ஒரு நாகரிக சமுதாயத்தினுடைய அடிப்படை அலகாக உருவகப்படுத்தப்படும் மகளிர், எச் சமுதாயத்திலும் இழிவு படுத்தப்படும் நிர்ப்பந்தம். எப்போது வேரோடு அழிக்கப்படுகிறதோ அதுவே, மானுட சமுதாயத்தின் பெருமைக்குரிய அத்திவாரமாக திகழும் என்பதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை.

**வி.விதூராஜா**

தெரிவு செய்யப்பட்ட கட்டுரை
சர்வதேச பெண்கள் தினம் – 2002

* * * * *

*கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டு நாம*
*வாழ்ந்த வாழ்க்கை ஏதும் இல்லை*
*மிஞ்சுகின்ற காவமிது*
*பெண்கள் எண்ணம் என்ன?*

www.tamilarangam.net

# பெண்குழந்தையை விரும்பாத தந்தைமார்களே!

*கருக்கலைப்பு, பெண்சிசுக் கொலை, பெண் குழந்தைகளை, சிசுக்களை கைவிடல் போன்ற துக்ககரமான நிகழ்வுகள் எங்கும் நடந்து கொண்டே உள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெண்ணை பொறுமையின் சிகரமாகவும், அன்பின் அவதாரமாகவும் பெயர் கொடுத்து பாவித்த சமுதாயமே இவளொரு தாயா? பெண்ணா என்று தூஷிக்கிறது. ஆனால் ஒரு உயிரை உதறும் அளவிற்கு ஒரு பெண் ஏன் ஆளாகிறாள் என்று பார்க்க மறுக்கிறது. இக் கேள்விக்கு பதிலளிப்பது போல் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

பெண் குழந்தைகள் பிறப்பதையே பெரும்பாலான தந்தைமார்கள் விரும்புவதில்லை. விதிவசத்தால் பெண்குழந்தைகள் பிறந்து விட்டால் மனைவி யையும் குழந்தைகளையும் வெறுக்கவும், கொடுமைப்படுத்தவும், செய்கி றார்கள்.

அது மட்டுமல்ல. தொடர்ந்து இரண்டோ மூன்றோ பெண் குழந்தை களுக்குத் தந்தையானவர்களைப் பார்த்து "நீ முற்பிறப்பில் பாவம் செய்தவன் அதனால்தான் உனக்குத் தொடராகப் பெண் பிள்ளைகளாகவே பிறக்கிறது" என்று கேலி செய்கிறார்கள். பெண் குழந்தையை ஒரு பாவச்சின்னமாக நினைக் கிறார்கள். வேண்டாத ஒரு பொருளாகப் பார்க்கிறார்கள். கவலைக்குரியதாக்கி கவலைப்பட்டுக்கொள்கிறார்கள்.

ஆண் குழந்தை பிறக்கையில் சந்தோசக் கூத்தாடுகிறார்கள். இது தான், செய்த புண்ணியத்தால் பிறந்த குழந்தை எனக் கொண்டாடுகிறார்கள். தான் ஒரு ஆண் சிங்கத்தை, ராசாவை, மந்திரியை பெற்றெடுத்திருப்பதாகச் சொல்லி மார்பு தட்டிக்கொள்கிறார்கள். பெருமையில் குடித்து வெறித்து ஆடிப்பாடிக் கொண்டாடும் தந்தைமார்களையும் பார்க்கின்றோம்.

இந்த ஆண் குழந்தையைப் பெற்றுக் கொடுத்ததும் ஒரு பெண்தானே!

www.tamilarangam.net

தனக்குப் பெண்குழந்தை பிறந்த காரணத்தால் மனைவியையும், குழந்தை யையும் மருத்துவமனைக்குச் சென்று பார்க்கவிரும்பாத (பார்க்காத) எத்த னையோ தந்தைமார்களையும் நாம் சமூகத்தில் காண்கின்றோம். இது உண்மை. அன்றிருந்து இன்றுவரை இது நிஜம்.

அடுக்கடுக்காகப் பெண் குழந்தையை பெற்றெடுக்கும் பட்சத்தில் பிரசவ வேதனையைவிடத் தனக்குப்பிறந்தது அடுத்ததும் "பெண்குழந்தை" என்றதனால் வேதனைப்பட்டு அழுது, உண்ணாமல், கண்ணீர் வடிக்கும் தாய்மார்களையும் பார்த்திருக்கின்றோம். ஏனெனில் தன் கணவன் பெண்குழந் தையை விரும்பாமை, அடுத்தது பொருளாதாரப் பிரச்சனை, இப்பொருளாதாரப பிரச்சனைக்கும் அதிக குடும்பங்களில் தந்தைமார்களே காரணமாகிறார்கள்.

காரணம் பொருளாதாரம் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளாமை, மது, மாது இவைகளுக்கு அடிமையாதல், வீண்செலவு செய்தல் போன்ற வற்றுக்குள்ளாகி மனைவி, பிள்ளைகள் பற்றிச் சிந்திக்காத தந்தைமார்களால் தாயாக்கப்பட்ட தாய்மார்களே பெரும்பாலும் அழுது வேதனைப்பட்டுக் கொள்ள நேரிடுகிறது.

மேலும் தெரிந்ததொரு பெண்ணிடமிருந்து அறிந்த கவலைக்கிடமான விடயம்.

அவளுக்குத் திருமணமாகி மூன்று வருடங்களில் இரண்டு வயது டைய அழகிய ஆண்குழந்தைக்குத் தாயாகி, மீண்டும் தாய்மையடைந்த வேளை தனக்கு அடுத்ததாகப் பிறக்கப்போவதும் ஆண்குழந்தையாகத்தான் இருக்கவேண்டும் என்றும், அதனையே தான் விரும்புவதாகவும் அவள் கணவன் சொல்லிக்கொண்டான். நாட்கள் செல்லச் செல்ல "இதுவும் ஆண் குழந்தையாகத்தான் நீ பெற்றெடுக்க வேண்டும் . . . இல்லாமல் பொம்பிளப் பிள்ளையை பெற்றெடுத்தாயோ. . . நீ வீட்டுக்கு வரத்தேவையே இல்ல" என்று வெறுப்போடும் கேலியாகவும் அதையே ஒரு மிரட்டலாகவும்

www.tamilarangam.net

சொல்லிக்கொள்ளும் கணவனின் பேச்சுக்களைக் கேட்டு மனம் வருந்தித் தான் ஒரு பெண்ணாகப் பிறந்ததே பாவம் என்று தினமும் மனம் நொந்து கண்ணீர் வடித்தாள். கடவுளையும் வேண்டினாள் இறுதியில் அவள் ஆண்குழந்தையையே தான் பெற்றெடுத்து மகிழ்ந்தாள்.

இத்தனைக்கும் அவன் அவளைக் காதலித்துத்தான் திருமணம் செய்துகொண்டான். தான் பிறந்தது ஒரு பெண்ணின் வயிற்றில், வளர்ந்ததும் பெண் சகோதரிகளோடு, காதலித்து திருமணம் செய்துகொண்டு இன்பமாக வாழவும் ஒரு ஆணுக்குப் பெண் வேண்டும்.

ஆனால் திருமணமாகித் தந்தையாகும் நிலையில் பெண்குழந்தையை வெறுக்கிறான். மாறாகப் பெண் பிறந்தால் கவலை கொள்கிறான். இது பெண்கள் தரப்பில் மிகவும் வேதனையையுண்டாக்குகிறது.

சகல துறைகளிலும் ஆண்களோடு சரியாகப் பங்குகொண்டு வாழும் காலகட்டத்திலும் பெண்பிள்ளைகள் தமக்குப் பிறப்பதை விரும்பாத தந்தை மார்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் என அறியப்படும்போது மிகவும் கவலைக்குரிய விசயமாகிறது.

இப்படியே உலகத்தில் உள்ள எல்லாத்தந்தைமார்களும் தனக்குப் பெண் குழந்தைகள் பிறப்பதை வெறுப்பதுபோல் யாருக்குமே பெண் குழந் தைகள் பிறக்காமல் எல்லோருக்கும் ஆண் குழந்தையே பிறந்தால் .......

- **யோகேஸ்வரி கிறிஸ்ணமூர்த்தி** -

*"பெண்ணென்ற போர்வையால் எம்மை - தினம்*
*வீட்டுக்குள்ளேயே பூட்டியே வைப்பார்*
*சமுதாயம் என்கின்ற பேய்தான் பெண்ணின்*
*பழமொழி சொல்லி பாழாக்கி வைக்கும்."*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலவச இணைப்பு

மரத்தில் ஏறினால் - ஆண்கோணி
வெளியில் போனால் - ஆட்டக்காரி
எதிர்த்து கதைத்தால் - அடங்காப்புடாரி
பேசாமல் இருந்தால் - அம்மாமுண்டி

இப்படி பல பட்டங்கள்
கட்டியகாலம் - போதும்
பெண்ணே!
பட்டங்களை உடைத்து - புது
வாழ்வு வாழ
வெளியே வா -
உனக்காக
கரங்கள் பல
காத்து நிற்கும்

-லதா-

---



சாந்தி காற்சட்டை அணிந்துள்ளாள். அவள் மரமேறுவதில் திறமை வாய்ந்தவள். அவள் ஒரு பெண்.

நன்றி
பெண் என்றால் என்ன?
ஆண் என்றால் என்ன?

www.tamilarangam.net

## வெளிவேலைகளை பெண்கள் இன்னும் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும்.

# புதியவானம்

காலைத்தென்றல் முகத்தில் மோதியது. வங்கக்கடல் பேரிரைச்சலாய் பயங்காட்டியது. சாவித்திரி நித்திரையில் இருந்து எழுந்து சோம்பல் முறித்தாள். வெளியில் வந்துமுற்றத்தில் நின்றாள். வானம் கறுத்திருந்தது. சாவித்திரியின் மனதைப் போலவே.

மனமெங்கும் இனம்புரியாத வேதனைச் சுமை. வீட்டிற்குள் நித்திரை யாய் இருந்த பிள்ளைகளை நினைத்துப்பார்க்கையில் துயரம் பீறிட்டெ ழுந்தது. என்ன செய்வது காலத்தின் நிர்ப்பந்தம் அவர்களை வறுமைக் குள்ளும், இழப்புகளுக்குள்ளும் சதிராட வைத்து விட்டிருக்கிறது.

சாவித்திரி கிழக்குக்கரையில் தமிழ் மரபிலே பொருளாதார வளம் மிக்க குடும்பமொன்றில் பிறந்த தலைப்பெண். அலையாட கடலெழும் அழகை, அதேநேரம் உள்ள உப்பான துறையை, நெய்தல்நில அழகை ரசித்தபடி ஒரு வானம்பாடியாக வாழ்ந்திருந்த பெண்.

மிகையான பொருளாதாரமும், மிதமான வசதிகளும் கொண்ட குடும்பத்தின் தலைப்பெண்ணாய் வளையவந்த அந்த இளமைக்காலங் களை நினைத்துப்பார்க்கையில் சாவித்திரியின் விழிநீர் பீறிட்டது. அடக்க முடியாத வேதனையுடன்.

அவள் வாழ்ந்த மண்ணில் மலர்ந்திருந்த மகிழ்ச்சிகள் கொள்ளை யிடப்பட்ட அந்த நாள் - நினைக்கவே அடிவயிறு சில்லிட்டது. இரண்டாம் கட்ட ஈழப்போர்க்காலத்தின் கீழ் ஓர் பின்னிரவில்அவள் குடும்பம் சிதைந்து போனது.

தொண்ணூறின் நடுப்பகுதியில் எங்கிருந்தோ வந்து குவிக்கப்பட்ட இராணுவத்தாலும், சுற்றிவளைப்புகள், கைதுகளாலும் பல அவலங்களைக் கண்டது கிழக்குக்கரை.

www.tamilarangam.net

வெளியில் சென்ற ஆண்கள் வீட்டுக்கு வரவில்லை, வீட்டில் இருந்தவர்கள் எங்கோ விசாரணைகளுக்காக அழைத்துச்செல்லப்பட்டார்கள். போகுமிடத்தில் நிலக்கண்ணி, துப்பாக்கி வெடி என்று பல வகைகளிலும் பலியாகிக்கொண்டிருந்தது இந்தச் சமுதாயம்.

அப்போதுதான் சாவித்திரியின் பெற்றோர்களும் ஓர் போர்க்காலப் பின்னிரவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது துப்பாக்கியின் சீற்றத்திற்கு ஆளாகி சிவப்புச் சடமாகிப் போனார்கள்.

சாவித்திரி அந்த இழப்பைத்தாங்க முடியாது எத்தனை துடிதுடித்தாள். தமிழ் சமுதாய உடைவுகளிலும், சிதைவுகளிலும் அவளும் அங்கமாகிப்போனாள். கிழக்குக்கரையில் போர் உக்கிரமடைந்தது.

திடீரென அவள் வாழ்ந்த மண்ணில் ஒரு குருஷேத்திரம் - வீடு, வாசல், சொத்துக்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓர் இடம் பெயர்ந்த அகதியாய் அவள் வாழத்தொடங்கி வெகுகாலமாகி விட்டிருக்கின்றது.

இழப்புக்கள் - தொடர்ச்சியான இழப்புகளை அவள் சந்தித்தாயிற்று. பெற்றோரை இழந்துநின்ற போது அவளுக்குத் துணையாக நின்ற தம்பி கூட சுற்றிவளைப்பொன்றில் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போனான்.

இந்த மாபெரிய உலகத்திலே தான் தனித்துவிடப்பட்டதாய் உணர்ந்த போதுதான் வாகீஷனை அவள் சந்தித்தாள். ஒரே ஊரவர்கள் என்ற முறையில் அறிமுகம்.

வாகீஷன் தலைநகரில் மிகவும் பொறுப்பான பதவியில் இருந்தான். அடிக்கடி ஊருக்கு வந்துபோவான். அவர்களிடையே ஏற்பட்ட அறிமுகம் பின்னர் காதலாகி திருமணம்வரை சென்றது.

தொடர்ச்சியாக தாய், தந்தை, தம்பி என இழப்புகளைச் சந்தித்த சாவித்திரி வாகீஷனின் உறவினாலும், அன்பினாலும் மெல்ல மெல்ல இயல்புநிலைக்கு வரத்தொடங்கினாள்.

க.பொ.த உயர்தரம் வரை கற்றிருந்த சாவித்திரி பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும்கூட அதை கவனத்தில் கொள்ளாது திருமணமே முக்

www.tamilarangam.net

கியமெனத் தீர்மானித்து ஓர் இல்லத்தரசியாய் மாறினாள். காலம் வேகமாக ஓடியது. எவ்வித துன்பங்களுமற்று அந்தக்குடும்பம் மகிழ்ந்திருந்தது. அழகாய் இரு குழந்தைகள் பிறந்தார்கள்.

கிழக்குக்கரையில் அவர்கள் வாழ்ந்த பிரதேசம் இராணுவக்கட்டுப் பாட்டுக்குள் வந்தது. வாகீஷனுக்கு இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசத்திற குள் தொழில் மாற்றம் வந்தது. தினமும் பல மைல் தூரங்களை மோட்டார் சைக்கிளில் கடந்து வாகீஷன் வீட்டுக்கும் தொழில் செய்யும் இடத்துக்குமாக அல்லாடிக்கொண்டிருந்தான்.

திடீர் திடீரென் எங்காவது துப்பாக்கியோசை எழும். மனிதர்கள் குருதியில் நனைந்திருப்பார்கள். பின்னர் சுற்றிவளைப்புகள், கைதுகள், விசார ணைகள் நடக்கும் இப்படியாக ஓர் போர்ச்சூழல் எப்போதுமே சதிராடிக் கொண்டிருந்தது அந்த மண்ணில்.

உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு சீவனம் நடாத்தும் அப்பிரதேச மக்களைப் போலவே அவர்களும் சீவித்தார்கள். கணவனே உலகமெ‌ன சாவித்திரி வாழ்ந்திருந்தாள். அவளுக்கான சகல வேலைகளையும் வாகீஷனே செய்துவந்தான். வீடுமட்டுமே அவளது உலகமாய் குறுகிப் போனது. பிள் ளைகள் வளர ஆரம்பித்தார்கள். அவள் சிறப்பான தாயாய், மனைவியாய் தன்பணிகளை செய்துகொண்டிருந்த போதுதான் அந்தக் குடும்பத்திற்கு கஷ்டம் வரத்தொடங்கியது. வாகீஷனுக்கு திடீரென சுகயீனம் ஏற்பட்டது, அதனால் தொழிலுக்கு போகமுடியாது போனது. குடும்பத்தில் பொரு ளாதாரப்பற்றாக்குறை எழத்தொடங்கியது. சாவித்திரி அவனைத் தேற்றினாள் - நம்வயல்களையும், தோட்டங்களையும் சரியாகப் பராமரித்தால் நாம் கஷ்டப்படத்தேவையில்லை என்றாள். அதுபோலவே இராணுவக் கட்டுப் பாடற்ற பிரதேசத்துள் இருந்த வயல், தோட்டங்களைப் பராமரிக்க வாகீஷன் ஆள் நியமித்தான். இடையிடையே தானும்போய் வந்தான். குடும்பத்தின் கஷ்டம் மறையத்தொடங்கிய போதுதான் அந்தப் பேரிடி இடித்தது.

ஆம்! வயல் பார்க்கச்சென்ற வாகீஷனை அவள் சிவப்பு ஜடமா கத்தான் கண்டாள். அதிகாலையில் அவன் சென்றபோது போராளிக ளுக்காய் பதுங்கியிருந்த இராணுவத்தின் துப்பாக்கிகளுக்கு வாகீஷனே பலியாகிப் போனான்.

www.tamilarangam.net

அத்தோடு சாவித்திரி நிலைகுலைந்துபோனாள். தாய், தந்தை, தம்பி, கணவன் என்று தொடர்ச்சியாக இழப்புக்களைச் சந்தித்த சாவித்திரி, தமிழ் சமுதாய சாபக்கேடுகளில் ஒருத்தியாக போனாள்.

என்ன செய்வது? எங்கு போவது? எதுவுமே தெரியாத பேரிருள் அவள் முன்னே.

இரு குழந்தைகளுக்காக அவள் உயிர்வாழ்ந்தே தீரவேண்டும் எனும் நிர்ப்பந்தம். என்ன செய்வது, அவள் வாழவே தீர்மானித்தாள். தன் பிள்ளைகளுக்காவது.

எத்தனை வசதியாய் வாழ்ந்திருந்தாள்.
எத்தனை அழகான குடும்பம் அவளுடையது.

எல்லாவற்றையும் சிதைத்து சின்னாபின்னப்படுத்தியது இந்தப் போர். பெற்றோரே உலகம் என வாழ்ந்திருந்த சாவித்திரி, பின்னர் கணவனே உலகம் என வாழ்ந்திருந்த சாவித்திரி இப்போது தனித்து நிற்கின்றாள்.

அவள் சார்ந்து வாழ்வதற்கு ஆண்துணை இல்லை. இந்த மாபெரிய உலகிலே ஓர் பெண்ணாய், ஓர் தாயாய், ஓர் விதவையாய் தனித்துவிடப்பட்ட சாவித்திரி வாழத்தான் போகிறாள். தன்னையும் காத்து தன் பிள்ளைகளையும் காக்கப்போகிறாள்.

அவளுடைய கல்வி அவளுக்கு கைகொடுத்திருக்கிறது. அவள் சந்தித்த தொடர்ச்சியான இழப்புகள் அவளை நிர்ப்பந்தித்து இந்த உலகில் ஓர் பெண்ணாகத் தனித்து நின்று போராட அனுப்பியுள்ளது. ஆம் இன்று ஓர் ஆசிரியையாய் புதிதாக வேலையில் அமரப்போகிறாள். எதிர்வரும் எல்லாத்துயர்களையும் அவள் சந்திக்கத் தயார். அவள் வெளி வேலை களைக் கவனிக்கத்தான் போகிறாள்.

-தனுஜா பூபால சிங்கம்-
தெரிவு செய்யப்பட்ட கதை
சர்வதேச பெண்கள் தினம்
–2002–

www.tamilarangam.net

## உயிர்ப்பு

என் இதயக் கூட்டுக்குள்
எங்கோ ஒரு மூலையில்
ஜீவனிழந்த பாடலாய்
இன்னும் அது.

என் பயணத்தின்
திசை மாறிப் போனாலும்
இன்னும் இன்னும்...
முகாரி பாடாமல்
என் கண்ணெதிரே
தொலைவில்
வெகு தொலைவில்
ஓர் ஒளிக்கீற்றை
அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் அது.

நான் பெண் என்பதை
அடிக்கடி எனக்கு
ஞாபகப்படுத்தி
என்னைத் தன்
வாரிசாக்க முயன்ற அன்னை

என் உரிமைகளை
மறுத்து மறுத்து
அடிமைத் தளைக்குள்
எப்போதும் என்னை
அடக்கி வைத்திருக்க நினைக்கும் தந்தை.

www.tamilarangam.net

எப்போதும் எந்தன்
கருத்துக்களை
அங்கீகரிக்க மறுத்து
தன் கட்டளைகளுக்கும்
கீழ்ப்படிய நிர்ப்பந்திக்கும்
என் மேலதிகாரி.

இத்தனைக்கும் மேலாய்
என் உணர்ச்சிகளை ஒதுக்கித்தள்ளி
அடக்குமுறைக்குள்
தன் உணர்ச்சிகளுக்கு வடிகாலாய்
என்னை வடிவமைக்க நினைக்கும்
என் வீட்டுக்காரர்

என் சுயமிழந்து போகாமல்
நான் நானாகத் தலையெடுக்க
என் பயணத்தின்
இலக்கை அடைய
எனக்கொரு வழித்துணையாய்....

என் இதயக் கூட்டுக்குள்
எங்கோ ஒரு மூலையில்
ஜீவனிழந்த பாடலாய்
இன்னும் அது.

அனாமி

www.tamilarangam.net

# அவனுக்கும்! . . . . . ?

S. சுதாகின்

'நேற்று ஏன் வரவில்லை' என்று
வாத்தியன் அதட்டிய போது
மாதவிடாய் வலியடக்கி - ஏதேதோ விளக்கங்கள்
நாக்குலர - அவன் கூறிநின்றான்!

சட்டியும் பானையும் . . . சமையல் கட்டும் . . .
புத்தக மூட்டையும் என
புதிய இணைப்பாளராக அவன்!

பட்டங்கள் பெற்றுப்பின்
பல பல பஸ்சுகள் பிடித்து - அதில்
வந்த இம்சைகள் தாங்கி . . .
இடையிடையே கொஞ்சம் முறைத்து,
வேலையும் பார்த்து வந்தான்.

தேடாத இடம் தேடி
கொள்ளையாய்ப் பணம் கொடுத்து
கட்டினான் திருமணத்தை.

பானை போல் வயிறூத
வாந்தி எடுத்து நிதம் - அவஸ்தையுடன்
அனுபவித்தான் - கர்ப்பமெனும் நற்சுகத்தை
வயிற்றினுள் வலியெடுக்க . . . பேறுகாலம்
நெருங்கிவர
அம்மா! என்று அலறிவிட்டான்!
என்னுள்ளே ஒரு உதறல் - துள்ளி
எழுந்துவிட்டேன்
என் தூக்கமும் கலைந்தது கனவுடன் சேர்ந்து!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மருத்துவிச்சி

நவீன தொழில் நுட்பவியலின் விருத்திகள் யாவுமே சாதாரண மக்களைப் போய் அடைவதில்லை. அதனால்தான் இன்னும் கிராமங்களில் அனேகமானவை கிராமங்களாக, அடிப்படை வசதிகளில் பெரும்பாலானவை இன்றியே காலங்காலமாக கூவி அலுத்த துயர்களோடு, நாகரீகத்தின் மாறுதல் கண்டு கேள்விகேட்கவியலாமல் உள்ளன.

மருத்துவத்துறையும் அத்தகைய அலுத்த துயர்களில் ஒன்று. துயர்களுக்கு முடிவு காணாவிடினும், துயரைக்குணமாக்கும் தோள்களாக ஆங்காங்கே, சில பழக்க வழக்கங்கள் கைகொடுக்கின்றன. கிராமங்களில் ஆபத்துக்கு உப்புக்கொடுக்கும், பாணியிலான பங்கை 'மருத்துவச்சி' எனும் பெண்கள் ஆற்றுகின்றார்கள். பிரசவத்தின் போதான தாயின் உயிரிழப்புக்கள் நவீன விஞ்ஞான மருத்துவத் தொழில் நுட்பவியல் விருத்தியில் கூட இன்னும் முழுதாக தடுத்து நிறுத்தப்படாத நிலையில் 'மருத்துவிச்சிகளின் பணி வெறும் 'மகத்தானது மட்டுமல்ல. அனுபவங்களை வளாகங்களாக்கி, அனுபவத் தேர்ச்சியை தொழில் நுட்பமாக்கி, அவர்கள் கையாளும் விதம் ஆபத்தில் 'கைகொடுத்த தெய்வங்களாக' அவர்களை மாற்ற வைக்கின்றது.

மண்டூர் மூன்றாம் பிரிவை சேர்ந்த கிட்டத் தட்ட அறுபத்தியொரு வயதுடைய 'அப்புகர் நல்லம்மா' அத்தகைய கைகொடுத்த ஒருவரில் அடங்குகிறார் இவர் கணவர் பெயர் பஞ்சாட்சரம். பிள்ளைகள் பத்து. உயிருடன் தற்போது ஆறு பேர் உள்ளனர்.

1978ம் ஆண்டிலிருந்து இற்றைவரைக்கும் மருத்துவிச்சியாக பணிசெய்யும் இவர் படிப்பு வாசனை அற்றவர். 2000க்கு மேற்பட்ட பிரசவங்கள் பார்த்துள்ளேன் என சாதாரணமாக சொல்லும் அவரிடம் இது எப்படிச் சாத்தியம் என பிரமிப்போடு நோக்கும்போது.....

"1978ம் ஆண்டு என் கடைசிப் பிள்ளை பிறந்தது. அப்போது ஊரில் பிரசவம் பார்க்கும் பெண்இல்லாமல் போய் விட்டாள். எனக்கு பிரசவம் பார்க்க யாருமில்லாது போய்விட்டது. வலியெடுத்த நேரத்தில் உதவுவதற்கு எவருமில்லாத நேரம். முன்னர் ஒன்பது பிள்ளை பெற்ற அனுபவம் உண்டு. 'எனக்கு நானே' பிரசவம் செய்தேன். அன்றிலிருந்து எனக்கு அது பெரிய பலத்தையும், நம்பிக்கையையும் தந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதன் முதலாக, தான் ஒரு பெண்ணுக்கு பிரசவம் பார்க்கச் சென்ற மையானது, வர வேண்டிய மருத்துவிச்சி வரவில்லை என்ற நிலையில் நானே பார்த்தேன். அறையுள் நுளைந்ததும் எனக்கு ஒரே பதட்டம். மூலையில் ஒருபெண் அமர்நதிருப்பதுபோலவும் திடீரென அவள் என்னைத் தாண்டி மறைந்து விட்டது போலவும் ஒரு அனுபவம். பின்னர் தயக்கமே இன்றி பிரசவம் பார்த்தேன். இன்றுவரைக்கும் தொடர்ந்து பார்க்கின்றேன். சில வேளைகளில் அரசாங்க வைத்தியர் (Doctor) கூட தன்னால் ஏலாவிட்டால் "நல்லத்தைக் கூப்பிடு" என்று கூறுமளவிற்கு எனக்கு அனுபவம் இருக்கின் றது" என்கிறார்.

அரசாங்கத்தினால் இலவச உணவு முத்திரையும், சிறிய பெட்டிக் கடையும் கொண்டு நடத்தி கிடைக்கும் வருமானத்தில் குடும்பம் நடாத்தும் இவருக்கு வருமானம் தராத தொழிலாகவே 'மருத்துவிச்சி வேலை' அமைந்துள்ளது.

"அவரவர் வசதிக்கு ஏற்ப விரும்பினால் ஐம்பது நுறைத் தருவார்கள். சிலர் புடவையும் வாங்கித்தருவினம். இவ்வளவுதான் தாங்க எண்டு நான் கேட்பதில்லை. ஒரு சந்தோஷத்தில் தருவதை நாமளும் சந்தோஷமாக வாங்கணும் தானே" என திருப்தியுறும் மனநிலை அவருக்கு.

தனது தொழிலும் ஒரு டொக்டரின் வேலையும் ஒருபோதும் குறைந்தது இல்லை. என சமப்படுத்தும் நல்லம்மா, நாம் செய்யும் வேலையைத்தானே அவர்களும் செய்கின்றார்கள். என்ன, மருந்து, குளிசையெல்லாம் நமக்கு இல்லை. அவ்வளவுதான்' என்கிறார்.

நீங்கள் இத்தகைய வேலைகளைச் செய்யும்போது எதிர்கொண்ட சிரமங்கள் - என இழுத்தபோது....

கஷ்டப்பட்டுத்தானே எந்த வேலையும் உண்டு. சில பிரசவங்கள் நடுராத்திரி சாமத்தில் எல்லாம் நிகழும். வந்து கூப்பிடும் போதெல்லாம் போகவேணும். சிலவேலை இரவு முழுவதும் விழிக்க வரும். எனினும் எனக்கு ஏதோ ஒரு கேஸ் வரப்போவது தெரிந்துவிடும் என்கிறார்.

'எப்படி'?

www.tamilarangam.net

தூக்க கலக்கமாக இருக்கும். அப்போது குருதி வெளிவருவதும், குருதி வெள்ளத்தில் பிள்ளை நழுவுவதுமான கனவு, 'மிளகுதண்ணி' வாசனை வருவது போல் இருக்கும். அப்படியான நிலையில் யாராவது வந்து உண்மையிலேயே கூப்பிடுவார்கள்.' எனக் கூறி அனுப விளைவுகளின் உள்ளுணர்வின் வலுவை எடுத்துக் கூறினார் நல்லம்மா.

இத்தகைய உள்ளுணர்வின் தொற்றல்கள், வழிகாட்டல்கள், அனுபவத்தின் துண்ணிய கூறுகள் ஏற்படுத்தும் நுட்பமான சூட்சும அலைகளாகும். இத்தகைய அலைகளின் தோற்றுக்களே "அழைப்புக்கள்" எந்தவொரு வேலையையும், முழு மனத்திருப்தியோடும் அர்ப்பணிப்போடும், ஈடுபாட்டோடும் ஆற்றும் ஒவ்வொருவருக்கும் இத்தகைய "உள்ளுணர்வின்" ஆற்றுகை சாத்தியமே.

இத்தனைக்கும், உதவிகள் என்று எதுவுமே இவருக்கு கிடைப்பதில்லை. டாக்டர் கொஞ்சம் பஞ்சு தருவார். முதல் இருந்த மருத்துவமாது (Midwife) டிற்றோல், கையுறை தருவார் இப்போது அவளும் இங்க இல்லை. நான்தான் கையுறை (Cover) வாங்க வேண்டும். அதுவும் என்ர சொந்தபணத்தில்தான்.

இதற்கு என்ன செய்யலாம்....? "முந்தி எல்லாம் கன நாளைக்கு மருத்துவிச்சா இருந்தவங்களத்தான் ஆஸ்பத்திரியில், தாதி வேலை கொடுத்தினம். இப்ப அப்படி இல்லை. அப்படியான திட்டத்தில் ஏதும் எங்களைப்போல உள்ள வங்களுக்கு உதவி செய்யலாம்தானே" என்கிறார் நல்லம்மா.

உங்கள் பிரசவ அனுபவங்களில் மறக்க முடியாதது எது? என விளித்தபோது,

'அப்படி ஒன்றும் இல்லை. சில கேஸில் (Case) பார்த்தவுடனே முடியுமா? முடியாதா? ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக வேண்டுமா? என்பதை கண்டு பிடித்து உடனே சொல்லக்கூடியதாக இருக்கும். அப்படியான நிலையில் நான் - கைவைக்காமலே அனுப்பி விடுவேன்." என்கிறார்.

அதனை நான் மற்றவர்களுக்கு செய்கிறேன். என்ன...., என்ரபிள்ளையள் நான் சமைக்கும் சோறு கறியை சாப்பிடுவதில்லை. என்ர கையால சமைப்பது அருவருப்பாக உள்ளதாம். 'அவைகளுக்கு' என்று கூறி சிரித்தே திருப்தியுறுகிறார், நல்லம்மா.

நேர்காணல் T. உருத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் ஓர் பிரவேசிப்பு

பூமிக்குள்
புதைந்து போகின்றது
எங்கள் எதிர்காலங்கள்,

எங்கள் சுதந்திரமும்
தொலை தூரம் நோக்கியே
நகர்கின்றது.

கர்பினியை
கானகத்தில் விட்ட ராமன்
அகலிகையை கல்லாக்கிய
கௌதமர்
மனைவியை,
சூதாடிய தர்மர்,
விற்ற அரிச்சந்திரன் - என
ஆயிரம் புருசர்கள்
புனைந்து
திருப்பலி காணும்
இவ்வுலகில் - எங்கள்
நியாயமான கேள்விகள்
விடையற்ற கேள்விகளே!

அருமைக் கதைகளென
அடிமைக்கதைகளால்
உருவாகி விட்ட
நாங்கள் - என்று
அடிமை விலங்கு உடைப்பது,

**கனவமகள்**
உழைக்கும் மாதர் சங்கம்.

www.tamilarangam.net

# தென்னாசிய பெண்களுக்கான மாநாடு




முரண்பாடுகளையும் இடர்பாடுகளையும் இனங்காணல் முரன்பாடு களை தீர்த்தல், சமாதானத்தை கட்டியெழுப்புதல் எனும் தலைப்பிலான பயிற்சிக் கருத்தரங்கு புதுடில்லியில் 2003 யூன் இரண்டு தொடக்கம் எட்டாம் திகதி வரை விஸ்கொம் (wis comp) நிறுவனத்தினரின் ஒழுங்கு படுத்தலின் கீழ் நடைபெற்றது.

இலங்கை, இந்தியா, நெபால்-வங்காளதேஸ், பாகிஸ்தான் போன்ற தென்னாசிய நாடுகளின் முரண்பாடுகளை நடைமுறை ரீதியாக பகுப்பாய்வு செய்தல், முரண்பாட்டு வடிவங்களை இனங்காணல் மற்றும் தென்னாசிய பெண்கள் ஆண்களை ஒன்றிணைத்து சமூக நீதி-சமாதானம் சமத்துவம் ஆகிய விடயங்களை ஆராய்ந்து சமாதானத்தை கட்டியெழுப்பல் ஆகிய நோக்குடன் மாநாட்டின் பயிற்சி கருத்தரங்கு அமைந்திருந்தது.

பங்கு பற்றுனர்களாக பல்கலைக்கழக மாணவர்கள், சமூகவியல், விஞ்ஞானம், மானிடவியல், மருத்துவக்கல்லூரி மாணவர்கள் மற்றும் பெண்கள் உரிமைகள், மனித உரிமைகளுக்காக நீண்ட காலமாக வேலை செய்யும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்னாபிரிக்க கைகொமிசனர் (High commissioner) உட்பட இந்தியா, டென்மார்க், அமெரிக்கா, நெபால், நோர்வேஎம்பசி போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள் வழங்குனர்களாக பங்குபற்றினர்.

www.tamilarangam.net

முதல் நிகழ்வாக தென்னாபிரிக்கா, வட அயர்லாந்து, மத்தியகிழக்கு நாடுகளின் கடந்த கால முரண்பாடுகளும், அனுபப் பகிர்வுகளும், அது பற்றிய ஆய்வுகளும் இடம்பெற்றன. அதைத்தொடர்ந்து இலங்கை, இந்தியா, கஸ்மீர், பாகிஸ்தான், நெபால் வங்காளதேஸ் நாடுகளின் பிரச்சினைகள் ஆராய்தலும் முரண் பாட்டுப் பகுப்பாய்வும், கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இதில் பெண்களது இடம்பெயர்வு, பாலியல் வல்லுறவு போன்ற விடயங்களும் விசேடமாகப் பார்க்கப்பட்டது. அதாவது போர் நடக்கும்போது பெண்கள் வன்முறைக்குள்ளாவது முக்கிய பிரச்சனையாக காணப்பட்டது. குறிப்பாக கஸ்மீர் போன்ற நாடுகளில் இன, சாதி, மத கலவரத்தில் பெண்கள் தாக்கப்பட்டமை சுட்டிக் காட்டப்பட்டது.

இவ்வகையில் ஒவ்வொரு தலைப்புகளின் கீழும் விவாதங்கள் விரிவாக நடத்தப்பட்டன. குறிப்பாக பெண்களுடைய, இடம்பெயர்வு, பர்தா அணிவதால் ஏற்படக்கூடிய தாக்கம் போன்ற தலைப்புகளில் விவாதம் இடம்பெற்றது. விவாதத்தில் பெண்கள் மட்டும்தான் மதப்பற்றை பின்பற்ற வேண்டுமா எனும் கேள்வி எழுந்ததுடன் அமெரிக்க பாராளுமன்றத்தில் (பர்தா) hijab அணிந் திராத ஒரு முஸ்லிம் பெண் நாட்டை விட்டு வெளியேற் றப்பட்ட சம்பவம் சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும் இவ் விவாதத்தின்போது கூறப்பட்ட சில கருத்துக்களில் ஆண்களுக்கு உடன்பாடு இருக்கவில்லை.

அடுத்து பின்வரும் தலைப்புக்களில் கருத்தரங்குகள் நடைபெற்றன.

- யுத்தமும் சமாதானமும்
- மனித உரிமைகள், மனித உரிமை உதவிகள், முரண்பாடுகளை தீர்த்தல்.
- முரன்பாடுகளும், சமாதானத்தை கட்டியெழுப்புதலும்
- புணர்வாழ்வும், நீதியும், நேர்மையும் சமயமும், வன்முறையும், சமாதானமும்
- முரண்பாடுகளை களைவதும், அகிம்சை வழியும்
- முரன்பாடுகளை இனங்காணல்
- நம்பிக்கையை வளர்த்தல், சுகவாழ்வு, குணப்படுத்தல், புணர்வாழ்வு, இடர்பாடுகளை களைதல்
- வன்முறை, அகிம்சை, முரண்பாடு
- பேச்சுவார்த்தை, நடுநிலை, சமப்படுத்தல்

போன்ற தலைப்புக்களில் கருத்தரங்குகள் அமைந்திருந்தது. இதன் நடுவே படக் காட்சியும் கலந்துரையாடலும் இடம்பெற்றன.

www.tamilarangam.net



அடுத்து பெண்களும் சமாதான முன்னெடுப்புக்களும் பற்றிய தலைப் பில் பின்வரும் அனுபவப் பகிர்வுகள் இடம்பெற்றன.

பெண்கள் சமாதான விரும்பிகள். அதற்காக அவர்கள் பல வித முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அவ்வாறான நிலையில் அவர்கள் எத்த னையோ சவால்களை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக வீட்டை எரித்தல், அச்சுறுத்தல். கொலைசெய்தல், பத்திரிகை நிறுவனத்தை எரித்தல், தவறாக விமர்சித்தல் போன்றவை உலகம் முழுவதும் அவர்களுக்கெதிரான பிரச்ச னையாக உள்ளது. ஆகவே பெண்களை சமாதான முயற்சிகளில் ஈடுபடச் செய்வது இன்று மிகவும் அவசியமாகும். அதிலும் பெண்கள் என்ற வகையில் தென்னாசிய பெண்களில், இக் கருத்தரங்கு மூலம் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து சமய முரண்பாடுகளும் சமாதானமும் பற்றிய பகிர்வில் தென்னாசியாவை பொறுத்த வகையில் சமயக் கட்டுப்பாடுகளும், சமய வழிமுறைகளும் மிகவும் இறுக்கமான நிலையையும் பாரிய முரண்பாடு களையும் கொண்டுள்ளது. சமயமானது மனித ஆத்மீகம், மன அமைதிக்காக பின்பற்றுவது போன்ற நல்வழிகளை தவிர்த்து இன்று முரண்பாட்டை கிளறக் கூடிய ஒரு கருவியாக சமூகத்தில் சமயம் மாறியுள்ளது. உதாரணமாக கஷ்மீர் பிரச்சனை, இன்று இந்து, முஸ்லிம் பிரச்சனை முற்று முழுதான ஒரு சமுதாயத்தை அழிந்து போகும் நிலைக்குள்ளாக்கும் அபாயத்தை தோற்று வித்துள்ளது. இம் முரண்பாட்டை தூண்டும் சமயத் தலைவர்கள் ஆண்களா கவே காணப்படுகின்றனர். சமயம் அகிம்சை வழியிலான சமூக மாற்றத்தை கொண்டு வரவேண்டும். தவிர சமூகத்தை அழிக்கக் கூடிய வாய்ப்பாக மாறக கூடாது.

www.tamilarangam.net

தென்னாபிரிக்க கைகொமிசினர் (High commissioner) தனது பகிர்வில், தென்னாபிரிக்காவில் உண்மைக்கும் மன்னிப்புமான இனக்க பாட்டுசபை அமைக்கப்பட்டுள்ளது. இது, பாதிக்கப்பட்டவர், குற்றம் செய்தவர் இருவரும் மன்னிப்பு சபைக்கு முன்னால் தாம் செய்த குற்றங்களை ஏற்றுக் கொண்டும் மன்னிக்கும் சூழலையும் உருவாக்கியுள்ளது. அத்துடன் இந்த நடவடிக்கை மீண்டும் தவறு செய்யாத ஒரு நிலையையும் உருவாக்கின்றது. பாதிக்கப் பட்டவர் தமது துயரங்களை வெளிப்படுத்த வாய்ப்பாக இருப்பதுடன் இது இருவருக்குமிடையில் இணக்கப்பாட்டு புரிந்துணர்வையும் தோற்று விக்கிறது என்றார்.

இலங்கையை எடுத்துக் கொண்டோமானால் நம் நாட்டில் மக்கள் எத்தனையோ இழப்புக்களுடனும் இன்னல்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பெண்களானவர்கள் தமது மகனையோ, கணவனையோ சகோதர னையோ, தகப்பனையோ இழந்த நிலையில் சுயமாக தமக்குள் சமாதானம் என்ற போர்வையை போட்டுக்கொண்டு “போனவர் திரும்பி வருவார்” எனும் மன நம்பிக்கையுடன், கோவிலையே எதிராளி அற்ற மன்னிப்புச் சபையாக ஏற்று தினம் தினம் சுற்றி வருகின்றனர், தம் துயர் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா? மறுதலிக்கப்படுகிறதா? புரியாத நிலையில் தெய்வங்களின் முன்நிற்கும் பெண்களைத் தான் அதிகம் நம் நாடு உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு தமது சுமையை, துயரை பகிர்வதும் தினமும் தாம் கேட்டது கிடைக்கவில்லை என்ற குமுறலுடன், தமக்கு அறிந்தவர்கள் தெரிந்தவர் களிடம் புலம்பிக்கொண்டு வாழும் நிலையே எமது சமூகத்தில் நடைமுறை சாத்தியமாக உள்ளது. எனினும் இலங்கை போன்ற நாட்டில் சமாதான உடன படிக்கை இழுபறியாகிக்கொண்டு செல்லும் காலகட்டத்தில் உண்மைக்கும் மன்னிப்புக்குமான சபை எவ்வளவு தூரம் சாத்தியமானதாக அமையும் என்பதை ஆழமாக யோசிக்க வேண்டி உள்ளது. உண்மைக்கும் மன்னிப் புக்குமான சபைகொண்டு வரக்கூடிய உண்மையுள்ள நம்பிக்கையுள்ள மனிதர் இங்கு யார்? டச்மன் ற்றுற்று போன்ற அற்பணிப்பு, ஆத்மீகம், உள்ள மனிதர் உருவாக வேண்டுமா? உருவாக்க வேண்டுமா? இருப்பவர்கள் சிந்திக்க தொடங்க வேண்டும்.

விஜயகுமாரி முருகையா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புன்மை

புளு ஒன்று
புழுக்கத்தால் தெறிக்கிறது.

உயிர் பிரிந்தால்
நாய்க்கும் உதவாது
மண்ணுக்குள் புதையுண்டு,
நாற்றமடிக்கும்,
அற்ப புளுவொன்று,
அரசோச்ச அலைகிறது.

கற்றை கற்றையாய்
உழைக்கும் சிறு புளுவொன்று,
சமுகத்தின் பார்வைக்கென
துணையென்று விலைப்பட்ட,
சின்னப் புளுவொன்று,
'வில்வெட்' அணிந்து,
'ஷோ'வாய்க் குதிக்கிறது.
கொள்வனவு போய்
உரிமையிடப்பட்ட
ஊத்தைப் புளு இன்று
புகுந்த இடம் கிடைத்த
சொந்தக்கார் ஒன்றை

www.tamilarangam.net

சுதந்திரமாய் ஓடுதலால்

நந்தவனத்து,
வண்ணாத்திகளைக்கூட
நையாண்டி செய்கிறது.

இந்தச் சமுகத்தில்,
புளுக்கள் மலிந்ததனால்
இளைய பெண்களிங்கே
வாழ்க்கையைத் தேடுகிறார்
புளுக்களுடன் வாழுதலால்
"புன்மை" எனப் புலம்புகிறார்.

-மஷூறா மன்சில்-



www.tamilarangam.net

# பெண் எழுத்தாளர் "மண்டூர் அசோகா"

"பாதை மாறிய பயணங்கள்". 'உறவைத்தேடி" போன்ற நூல்களை தந்துள்ள மண்டூர் அசோகா இலக்கிய உலகில் கால் பதித்துள்ள மட்டக் களப்பு எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர் ஆகும். மண்டூர் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவரது கதைகள் அனைத்தும் மட்டக் களப்பு பிரதேசத்தைப் பிரதிப்பலிப்பனவாக உள்ளது.

மண்டூர் இராமகிறிஸ்ணமிசன், பட்டிருப்பு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றுள்ள இவர் தற்போது கல்லடி சிவானந்தா மகாவித்தியாலயத்தில் தமிழ்மொழி, இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியையாக பணியாற்றுகிறார். மற்றும் மட்டக்களப்பு தமிழ் சங்கத்தில் நிருவாக சபை உறுப்பினராகவும் உள்ளார்.

இயல்பாய் எழுந்த இவரது வாசிப்பு ஆர்வத்தினால் சிறு சிறு ஆக்கங் களை சிறு வயதில் இருந்தே வெளிப்படுத்த தொடங்கினார், அசோகாவின் "அம்மா சிரிக்கிறாள்". முதலாவது சிறுகதை தாய்நாடு பத்திரிகையில் வெளியானது. இவரது நீண்ட கால இலக்கியப் பயணத்தில் மூன்று சிறுகதை தொகுதிகளும், ஒரு நாவலும் வெளிவந்துள்ளது. அத்துடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி "கொண்றைப் பூக்கள்".

அண்மையில் "உறவைத்தேடி" எனும் இவரது நான்காவது நூலுக்கான வெளியீட்டு விழா கொழும்பிலும் மட்டக்களப்பிலும் இடம் பெற்றது. இவரது ஏராளமான கவிதைகள், சிறுகதைகள், மெல்லிசைப் பாடல்கள், நாடகங்கள், கட்டுரைகள் என பல ஆக்கங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி யுள்ளன.

இலக்கியக் கூட்டுறவின் மூலம் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்ட

www.tamilarangam.net

இவர், இவர் உட்பட நான்கு பெண் எழுத்தாளர்களுடன் சேர்ந்து எழுதிய ஒரு சதுரங்கக் கதை 1979இல் வீரகேசரிப் பத்திரிகையில் வெளியானது. இதைத் தொடர்ந்து ஒன்பது பெண் எழுத்தாளர்களுடன் இணைந்து எழுதிய மலையகப் பின்னணியைக்கொண்ட குறுநாவல் மித்திரன் வாரமலரில் வெளியானது. தொடர்ந்து மட்டக்களப்பு பிரபல்ய எழுத்தாளர்களுடன் இணைந்து எழுதிய இந்திய அமைதிப் படையின் அட்டூளியங்களை அம்பலப்படுத்தும் ஒரு நாவல் வெளியிடப்படாமல் போனது.

மண்டூர் அசோகா பெற்றுள்ள விருதுகள் என நோக்கில்..... இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பிற்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. பாதை மாறிய பயணங்கள் நாவலுக்கு வடகிழக்கு மாகாண சாகித்தியப் பரிசு கிடைத்தது. தஞ்சாவூர் இதயகீதம் இலக்கிய பொதுநல இயக்கம் 2001இல் நடத்திய உலகத் தமிழ் மாநாட்டில் "தமிழருவி" என்ற பட்டமும் விருதும் வழங்கப்பட்டது.

1. *உங்களது எழுத்துலகின் பிரவேசம் பற்றிக் கூறமுடியுமா?*

என்னைப் பொறுத்த வரையில் எனது எழுத்துலகப் பிரவேசம் என்னிடம் சிறுவயதில் இருந்த அதீதமான வாசிப்புப் பழக்கம் உருவாக்கித்தந்த சிந்தனா சக்தியாலும் கற்பனை வளத்தாலும் ஏற்பட்ட ஒரு நிகழ்வென்று தான் சொல்வேன். தவிரவும் எனது மண்டூர்க் கிராமம் வர்ணிக்கமுடியாத வனப்பு வாய்ந்த ஒரு சூழலைக் கொண்டது. குமரக்கடவுளின் அருள் நிறைந்தது. இந்த வனப்பும் அருளும் என்னிடம் நிறையவே கற்பனை வளத்தைத் தூண்டின. நாகரிகத்தின் அசிங்கங்கள் தொட்டுக் கூடப் பார்க்காத எனது கிராமத்தில் கவனத்தைக் கவரக் கூடிய எந்தவித பொழுது போக்கு அம்சங்களும் இருக்கவில்லை. இதனால் வாசிப்பதும், கற்பனையில் ஆழ்ந்து போவதும், சிந்திப்பதும் எழுதுவதுமே எனக்கு ஆத்மதிருப்தியைத் தந்தன. இதற்கும் மேலாய் எனது உறவினர்கள் பலரும் தமிழறிஞர்களாய், கவிஞர்களாய் இருந்தனர். அவர்களின் சகவாசமும் எனக்குள் ஒரு உந்துதலை ஏற்படுத்தி இருக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. **நீங்கள் ஓர் பெண் எழுத்தாளி. அந்த வகையில் எழுத்துலகில் தங்கள் அனுபவம் எவ்வாறு உள்ளது.**

ஆரம்ப காலத்தில் என் எழுத்துக்களால் எனக்கு ஓரளவு பிரபல்யம் கிடைத்தது. இந்தப் பிரபல்யம் ஏற்படுவதற்கு இலங்கை வானொலியில் நான் எழுதி ஒலிபரப்பாகிய மெல்லிசைப் பாடல்கள் பெருமளவில் காரண மாயிருந்தன. இதனைத் தொடர்ந்து எனது முதலாவது சிறுகதைத் தொகுப் பான "கொன்றைப் பூக்கள்" வெளிவந்து அதற்குத் சாகித்தியப் பரிசும் வழங்கப்பட்ட போது, பெண் எழுத்தாளி என்ற வகையில் என் பெயர் இலக்கிய உலகில் பெரிதும் பேசப்பட்டது. என் எழுத்துக்களுக்கான விமர்சனங்களும் ஏராளமாய் என்னைநாடிவந்தன. நான் எழுத ஆரம்பித்த அந்தக் காலப்பகுதியில் பெண் எழுத்தாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாயிருந்ததால் ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்பது போல நான் பேசப்பட்டேன். என்று நினைக்கிறேன்.

இவ்வாறு பேசப்பட்டபோதும், சமூகப் பார்வையுடன் எழுது கின்றேன் என்று பாராட்டப்பட்டபோதும் எனது கதைகளின் உள்ளே ஊடுருவி நின்ற சோகத்தைக் கிண்டிக் கிளறி வெளியே எடுத்து அந்தச் சோகங்களை என் வாழ்க்கையின் அனுபவங்களோ என்று கேள்வி எழுப்பிய பிரபலங்களை என்னால் தரிசிக்க முடிந்தது. இந்தச் சோகங்கள் ஓர் ஆணின் பேனாவிலிருந்து பிறந்திருந்தால் அதற்கான விமர்சனங்கள் வேறுவிதமாய் அமைந்திருக்கலாம். ஒரு பெண் என்ற பார்வையில் வைத்தே இவ்வாறான விமர்சனங்கள் வந்ததாக நான் நினைக்கிறேன். இது தவிர ஆண்களைப் போல இலக்கியக் கூட்டங்கள், விழாக்கள், கருத தரங்குகள் எல்லாவற்றிலும் பங்குகொள்ள முடியாத ஓர் இழப்பும் எனக்கு ஏற்பட்டது. வீட்டில் பெற்றோரிடம், கணவரிடம் இருந்து கட்டுப்பாடுகள் இறுக்கமாக இல்லாமல் ஓரளவு, சிலவேளைகளில் தாராளமாகவே சுதந்திரம் கிடைத்தும் கூட இந்தநிலை ஏற்பட்டது. நான் ஓர் ஆணாக இருந்திருந்தால் இம்மாதிரியான இழப்பு ஏற்பட்டிருக்காது என்றே நினைக்கிறேன். பெற்றோருடன் இருந்த காலத்தில் சமூகத்துக்கு ஓரளவு அச்சப்படவேண்டிஇருந்தது. திருமணமானபின் ஓர் இலக்கியவாதியான நான் சராசரிப் பெண்ணாகவும் வாழவேண்டி இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. **பெண்கள் பற்றிய விழிப்புணர்வு சகல மட்டத்திலும் ஏற்பட்டு வரும் இவ்வேளையில் இது சார்ந்து தங்களுடைய ஆரம்ப காலப் படைப்புக ளுக்கும் இன்றைய காலபடைப்புகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள மாற்றங் களை கூற முடியுமா?**

ஆமாம், பெண்கள் பற்றிய விழிப்புணர்வு சகலமட்டத்திலும் ஏற்பட்டு வருகின்றது என்ற உங்களுடைய கூற்றுப்பற்றி எனது கருத்தைக் கூறிவிட்டு அதன்பின் உங்களுடைய கேள்விக்கு வருகின்றேன்.

சகல மட்டத்திலும் என நீங்கள் குறிப்பிடுவது பொருத்தமானதாக எனக்குத் தெரியவில்லை. படித்தவர்களிடையே வேண்டுமானால் இந்த விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் பெண்ணுரிமை பற்றி ஏற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் சராசரி ஆண்களிடம் அப்படியான விழிப் புணர்வு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் இன்னமும் பெண் அடங்கி ஒடுக்கப்பட வேண்டியவள் என்ற கொள்கையை விட்டு வெளியே வருவதை ஏற்றுக் கொண்டதாகக் கூற முடியவில்லை. வீட்டிலிருந்து வெளியேவரும் இளம் பெண்கள் ஆண்களின் தொல்லையில்லாமல் உரிய இடத்துக்குச் சென்று திரும்பமுடியாமல் இருக்கிறதே. இது அடக்கு முறையின் ஒரு படிவம்தானே? நிலைமை இப்படி இருக்கையில் எல்லா மட்டத்திலும் விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதாக எப்படிக் கூறமுடியும்.? இனி உங்களுடைய கேள்விக்கு வருவோம். பெண்கள் சார்ந்த எனது ஆரம்ப காலப் படைப்புக்களுக்கும் இன்றையகாலப் படைப்புக்களுக்கும் இடையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆரம்ப காலத்தில் இருந்தே நான் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப்பற்றி எழுதி வந்திருக்கின்றேன். நான் பிறந்து வளர்ந்ததும், அனுபவங்களைப் பெற்றதும் கிராமத்தில், நிறையப்படித்தவர்களும், படிப்பறிவே இல்லாத வர்களும் வாழ்ந்த கிராமம் என்னுடையது. அங்கு பெண்களைச் சமமாக மதிப்பவர்களும் இருந்தார்கள். பெண்களை மிகக் கேவலமாக நடாத்து பவர்களும் இருந்தார்கள். சில குடிகாரக் கணவன்மாருக்கு வாழ்க்கைப் பட்ட பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளைக் கண்ணாரக் கண்டு மனங்குமுறி அவர்களுக்காக இரங்கி ஏங்கி அவர்கள் ஏன் இப்படி வாழ வேண்டும் என்று ஆத்திரப்பட்டு அதன்விளைவாய்ப் பல கதைகள் எழுதினேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அப்போதெல்லாம் நான் எழுதிய கதைகளில் பெண்கள்படும் துன்பங்கள்தான் என்னால் சொல்லப்பட்டன. அவர்களுடைய துயரங் களுக்கான விடிவை, ஒருவழியைச் சொல்லச்சற்றுத்தயங்கினேன். ஆனால் இப்போது எழுதுகின்றகதை விடுதலை பெறுவதற்கான ஒரு வழியை என்னால் காட்டமுடிகின்றது. இது எனது அனுபவமுதிர்ச்சியின் வெளிப் பாடு என்று சொல்லமுடியும்.

4. **"பெண்கள் எழுதுவது குறைவு" எனும் கருத்து பரவலாக பேசப்படுகிறது. இதுபற்றி பெண் எழுத்தாளர் என்ற வகையில் தங்கள் அனுபவம், அபிப்பிராயங்களை கூறமுடியுமா?**

நிச்சயமாக இது ஏற்றுக்கொள்ளக் கூடியதும் வருந்தத்தக்கதுமான ஒரு கருத்துத்தான். பெண்கள் எழுதுவது குறைவு என்ற உங்களுடைய கூற்றில் இரண்டு கருத்துக்கள் அடங்கியுள்ளன. பெண் எழுத்தாளர்களின் எழுத்து முயற்சிகள் குறைவு என்பது இன்னொன்று. நீங்கள் இரண்டாவது கருத்துப்படத்தான் கேட்கின்றீர்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் நான் எழுத ஆரம்பித்த காலத்தில் பெண் எழுத்தாளர்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது நிலை வேறு. இப்போ கணிசமான அளவு பெண் எழுத்தாளர்கள் உள்ளனர். ஆனால் அவர்கள் எழுதுவது மிக மிகக் குறைவுதான். இதில் நானும் அடக்கம்.

இதற்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம். நமது சமூகத்தில் பெண்ணின் மீது சுமத்தப்படும் உடல், உளரீதியான தாக்கங்கள் தான் இவற்றிற்கு அடிப்படையாக அமைகின்றன. ஒரு ஆணுக்கு குறிப்பிட்ட நேரஅளவுக்குள்தான் வேலை இருக்கும். ஆனால் பெண் ணுக்கு அப்படியல்ல. நாள் முழுவதும் ஏதாவது வேலைகள் இருந்து கொண்டிருக்கும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு இரட்டிப்புச் சுமை. இது ஒரு காரணம். இதுதான் முக்கியகாரணம். அடுத்தது, சில பெண்களுக்கு ஆரம்பத்தில் இருக்கிற உற்சாகம் நாளாக நாளாகக் குறைந்து விடுவது. இது அவர்களின் மனநிலையைப் பொறுத்தது. இன்னும் சிலருக்கு வீட்டில் பெற்றொரின், கணவன்மாரின் ஒத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ழைப்புக்கிடைப்பதில்லை. பலருக்கு வெளியீட்டு வசதிகள், பிரசுர வசதிகள் கிடைப்பதில்லை. இப்படியாக பெண்களின் எழுத்து முயற்சிகள் ஏதோ ஒருவகையில் மழுங்கடிக்கப்பட்டு விடுகின்றன. இந்தத் துர்ப் பாக்கிய நிலையிருந்து பெண்கள் வெளியே வரவேண்டும். நானும் கூட.

5. **தங்களது படைப்புக்கள், பல செய்திப் பத்திரிகையில் வெளிவந்துள்ளன. பெண் படைப்பாளிகளின் படைப்புக்களை வெளியிடுவதற்கும், பெண் பற்றிய படைப்புக்களை வெளியீடு செய்வதற்கும் இடையில் பத்திரிகை உட்பட மற்றும் ஏனைய ஊடகத் துறையினரின் பங்களிப்பு பற்றி கூற முடியுமா?**

பெண்படைப்பாளிகளின் படைப்புக்களை வெளியிடுவதற்கும் பெண்பற்றிய படைப்புக்களை வெளியிடுவதற்கும் ஊடகத்துறையினரின் பங்களிப்புபற்றிக் கேட்கின்றீர்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த விடயத்தில் ஊடகத்துறை எவ்விதமான பாரபட்சமும் காட்டியதாக எனக்குத் தெரியவில்லை. தாராளமாகவே இவ்வாறான படைப்புக்கள் வெளிவந்தி ருக்கின்றன.

6. **பெண்கள் இன்று பொருளாதாரத்தில் ஆண்களுக்கு சமமாக பங்களிப்பு செய்கின்றனர். கல்வி, மற்றும் ஏனைய துறைகளிலும் முன்நிற்கின்றனர். எனினும் குடும்பம் என்ற அமைப்பில் பெண்ணின் நிலை இரண்டாம் பட்சமாகவே உள்ளது. இதுபற்றி உங்கள் கருத்தை கூற வேண்டுமா?**

உங்களுடைய முந்திய கேள்வி ஒன்றில் பெண்பற்றிய விழிப் புணர்வு சகல மட்டத்திலும் ஏற்பட்டு வருகின்றது என்று கூறினீர்கள். அதனை நான் மறுத்ததற்கான காரணம் இப்போது புரியும் என நினைக்கின்றேன். சகலதுறைகளிலும் இன்று பெண்கள் ஆண்களுக்கு நிகராக, சில சந்தர்ப்பங்களில் ஆண்களுக்கும் மேலாக உயர்ந்துதான் நிற்கின்றார்கள். பல குடும்பங்களில் ஆண்களைவிடவும் கூடுதலான உழைப்பாளியாக, கூடுதலான வருமானம் பெறுபவளாக இருந்தபோதும் பெண் ஒருபோதும் அங்கு முதன்மைப்படுத்தப்படுவதில்லை, சமமாகக்கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதிக்கப்படுவதில்லை. பெண்ணின் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. இதற்கு காலம்காலமாக ஆண்களுடைய மனங்களில் ஊறிவிட்ட அதிகார போக்கும் பெண்பற்றிய தரக்கணிப்பீடும் என்னதான் அறிவு பரந்துபட்டபோதும் மாற்றப்படமுடியாததாய் இருப்பதுதான் காரணம். இந்தநிலை மாறவேண்டும். இந்தநிலையை மாற்றுவதற்கு நாமெல்லாம் முயற்சி செய்யவேண்டும். எத்தனை படித்த பெண்ணாயிருந்தாலும் குறிப் பிட்ட சில வேலைகளை ஒரு பணியாளரைப் போல பெண்தான் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம், கட்டாயம்கூட இன்னும் மாறாமலேயே தான் இருக்கிறது.

7. ***கலாசாரம், பண்பாடு, போன்றவற்றை கட்டிக் காப்பவர்களாகவும், அதை வளர்த்தெடுப்பவர்களாகவும் பெண்களே உள்ளனர். இவ்வாறான சமூகப் பார்வைகள் பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது. இவ்வா றான தடைகளை களைய எழுத்துலகின் மூலம் தாங்கள் ஆற்றும் பணி பற்றி கூறமுடியுமா?***

இந்த விடயம் பற்றி நான் இதுவரையில் பெரிதாக எனது கவனத்தைச் செலுத்தவில்லை என்றுதான் நினைக்கிறேன். இரண்டொரு கதைகளில் கலாசாரம், பண்பாடு போன்ற கட்டுக்கோப்புகளிலிருந்து மீற நினைக்கும் பெண்களுக்குக் குடும்பத்தில் ஏற்படும் தொல்லைகளையும் அதன் மூல மாக அவர்கள் எடுக்கும் சில துணிச்சலான முடிவுகளையும் கூறியுள் ளேன். ஆழமாக இதுபற்றி எதையும் செய்யவில்லை என்றே கூறுவேன்.

**விஜயலட்சுமி சேகர்**
சந்திப்பு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வானம் ஏன் மேலே போனது

பொன்னம்மாக் கிழவிக்கு பொல்லாத கோபம் வந்தது. எத்தனை நாளைக்குத்தான் இப்படி குனிந்து குனிந்து கூனியே போவது. குனிய குனிய முட்டிக் கொண்டு வரும் கெட்டித்தனம் இந்த வானத்திற்கு மட்டும்தான் இருக்கிறதோ. தட்டிக் கேட்க ஆளில்லை என்ற தைரியம் போல. நாம நிமிர்ந்து வாழ என்னதான் வழி. அம்மா.. அம்மம்மா... அவ அம்மா ... பாட்டி... பூட்டி.. தாத்தா... கொள்ளுத்தாத்தா.., எல்லாரும் இந்த வானத்திற்கு பயந்து அடங்கித்தான் போனார்களே.

பத்து வயசுக்கு மேல நம்மளால நிமிர்ந்து நிற்கவே முடியுதில்லையே. அதுவரைக்கும் நான் பூமிக்கும் வானத்துக்குமான உயரம். அதுக்கு மேலதான் அறிவும் கூடயா வளருது, ஆளும் வளருது.. ஆனா நம்மளோட உண்மையான வளர்ச்சிய உணர முடியாம வானம் இப்படி வளைச்சுப் போடுறாப் போல எப்பவும் முதுகுல முட்டுதே. தலய தூக்கி பாக்கமுடியல்ல, முன்னுக்கு என்னதான் இருக்கு என்று உணர முடியல்ல, பிறடி நிமித்தி யோசிக்க முடியல்ல... முள்ளெழும்ப முழுசா நிமித்த முடியல்ல...

ம்... முதுகிருந்து என்ன பயன்... முள்ளந்தண்டிருந்து என்னபயன்... குனிஞ்சி... குனிஞ்சி குறுகி புழுவா இந்த பூமிக்குள்ள புதைய வேண்டி இருக்கே. பொங்கி எழுந்த அவள் பெருமூச்சு பூமியை நோக்கியே திருப்பப்பட்டது.... இதனால் எழுந்த ஆத்திரம், எதுவுமே செய்ய முடியாத கையாலாகாத்தனம் அவள் கண்ணில் நீரை வரவழைத்தது.

இன்று, என்றுமில்லாதவாறு பொன்னம்மா பொங்கி எழக் காரணம் அவள் கையிலுள்ள இந்த விளக்கு மாறாகவே இருக்கலாம்.

ஏனென்றால் பொன்னம்மாவிற்கு இன்று, அதிகவேலை. நாளை அவள் வேலை பார்க்கும் இந்த வீட்டு சொந்தக்காரனின் மகளுக்கு திருமணம். வளவு முழுவதும் கூட்ட வேண்டும். புது விளக்குமாறின் உயரமோ வழக்கமான உயரத்தை விட கூடிவிட்டது. விளக்குமாறு புதுசு என்பதால் வீட்டுச் சொந்தக்காரனுக்கு அதை வெட்டிக் குறைக்க மனமில்லை.

www.tamilarangam.net

வானமோ மிகவும் பணிவாய் (கீழே) உள்ளது. எல்லோரும் மூன்று, மூன்றரை அடி உயர வளர்ச்சிக்கு பின் வளைந்தே தீரவேண்டும். வானம் இப்படி யிருக்கும்போது பொன்னம்மா கையில் உயரமாயுள்ள விளக்குமாறின் நுனி வானத்த தட்ட தட்ட கூட்டவே முடியல்ல. நேரம் செல்ல... செல்ல.. வேலையும் முடிந்தபாடில்லை பொன்னம்மாவிற்கு வந்ததே கோபம்.

"தட்டிக் கேட்க ஆளில்ல என்ற நினைப்பு இந்த வானத்திற்கு" வந்த ஆத்திரத்தில் தன்ர முழு பலத்தையும் சேர்த்து விட்டாளே ஒரு குத்து வானத்திற்கு... என்ன அதிசயம் பட பட என பெரிய சத்தம். .. வானம் மேலே... மேலே... மேலேயே... போய்விட்டது.

....பொன்னம்மாவிற்கு மட்டும் அன்று அந்த தைரியம் வந்திரா விட்டால்... இன்று நம் நிலமை...

விஜயலட்சுமி சேகர்.



www.tamilarangam.net

பெண்ணுக்கு ஒரு மணம்,
இரண்டாம் மணமோ கண்டணத்துக்குரியது
இரண்டாம் புணர்ச்சியோ கடவுளுக்கெதிரானது
தண்டனைக்குரியது
ஆயின்,
குழந்தைகளை மார்புடன் அணைத்த
தத்தம் மனைவியர் வீட்டிலுறங்க,
கோடரி தூக்கிய ஆடவ வீரர்
கடவுளின் பெயரால் ஆயுதம் ஆவர்.

மதத்தின் பெயரால் குறிகள் விறைக்கும்,
மதத்தின் பெயரால் தம் நிலை மறக்கும்,
மார்புடன் அணைந்த குழந்தைகள் எறிந்து
"வேற்று"ப் பெண்டிரைப் புணர்ந்து தண்டிப்பர்.

நிகழ்காலச்சட்டங்கள் பழங்காலம் போலவே
எழுதியோருக்காக மௌனித்து ஓயும்.
கூடி அழவும் பயந்த பெண்கள்
கடவுளர் கோயிலில் விரதங்கள் காப்பர்.


ஆயுதம் ஏந்திய கடவுளாயின் என்?
அனைத்தும் துறந்த கடவுளாயின் என்?
அன்பைப் போதித்த கடவுளாயின் என்?
அனைவரின் பெயரிலும் ஆயுதங்கள் எழும்.

கடவுளின் பெயரால் மதங்கள்,
மதங்களின் பெயரால் ஆயுதங்கள் ,
ஆயுதம் கையில் ஏந்திய மனிதர்,
மனிதரின் கையில் காவலுள் கடவுள்?

வாழிய கடவுளர், வளர்க மதங்கள்
மதங்களைக் காக்க, இனங்களைக் காக்க,
மனிதரைப் படைக்கும் பாவத்தைப் புரிவதால்....
அழிந்தொழிக பெண்கள்!
(இன மத இன்னோரன்ன காரணங்களுக்காகப் பாலியல்
பழி தீர்க்கப்பட்ட உலக சகோதரிகளுக்காக)

**கமலா வாசுகி**
**ஆனி 2003**

www.tamilarangam.net



www.tamilarangam.net

அது ஒரு சமாதானத்துக்கான சர்வதேச பெண்கள் மாநாடு. யுத்தங்கள், பிரச்சனைகள் நடந்து கொண்டிருக்கும் எல்லா நாடுகளிலிருந்தும் பெண்கள் பிரதிநிதிகள் வந்து இருந்தார்கள். தத்தமது பிரச்சனைகளையும் அவற்றுக்கான காரணங்களையும் பெண்களின் பார்வையில் பகிர்ந்தார்கள்.

இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால் இன்னும் என்னென்னவோ பெயர்களில் எல்லாம் யுத்தம்.

விடுதலைக்கான போர்.
எண்ணெய்க்கான போர்
தங்கத்துக்கும், வைரத்துக்குமான போர்...
வர்த்தகத்துக்கான போர்... எனப்பட்டியல் நீளும்.

எல்லா யுத்தங்களையும் ஊடறுக்கும் விடயமாய் ஆண்மை-ஆணாதிக்கம்.
அதிகாரமும், ஆதிக்கவெறியும்...
அது பரவிய இடமெல்லாம் யுத்தம்.

அன்று எனக்குள் எழுந்ததுதான் இந்தக் கேள்வி.

அண்ட வெளியிலுள்ள கிரகங்களுக்கும் மனிதர் போகத் தொடங்கி விட்டனரே. அங்கும் விரைவில் யுத்தங்கள் ஆரம்பிக்குமோ?

-கமலா வாசுகி-

www.tamilarangam.net

# நானும் ஒரு மனுசியாய்......

என் தேகம் - வெறும்
தசைப்பிண்டமல்ல
உணர்வுகளற்ற
ஜடமல்ல
நீ விரும்பிய வடிவில்
எனை பிடித்துக் கொள்ள
நான்
ஈரக்களியல்ல
நீ விரும்பிய வரிகளை
தீட்டிக் கொள்ள - நான்
வெற்றுப் பேர்ப்பரல்ல
உன் ஏவல்களை
ஏற்று நடக்க - நான்
அடிமையல்ல
நான் ஒரு மனுசி

வாலிருந்திருந்தால் - நீ
எனக்கு எஜமான்
உனக்கு வாலிருந்திருந்தால்
நான் உனக்கு
எஜமானி

மௌனமாய்
உனைக்கண்டு வெட்கி
தலைகுனிய - நான்
பழக்கப்பட்டவளுமல்ல
பழக்கமடைபவளுமல்ல

www.tamilarangam.net

அதிகாரம் உனக்கும்
அடிமைப் பார்வைகள்
எனக்கும்
விதிக்கப்பட்டதல்ல.

நானும் நீயும்
சேர்ந்ததே உலகு

தாயாய், தாரமாய்
தெய்வமாய் பார்க்கும் பார்வை
மனுசியாய் பார்க்கட்டும்
வானத்தைப் பார்க்கும்
ஆராத்திகள் தேவையில்லை
பெண் பெருமை என
பேதமைகள் கூறும்
மேடைப் பேச்சுக்கள்
தேவையில்லை.

மனிசர்களோடு
நடை போட
என் விருப்பு
என் சுயம் - என
நானும் ஒரு மனுசியாய்
மலர ஆசைப்படுகிறேன்!
நான் ஒரு மனுசி

**கி.கலைமகள்**
நாவற்குடா
உழைக்கும் மாதர் சங்கம்

www.tamilarangam.net

# போதை ஒரு கவசம்

ஒரு மகள் காணக்கூடாத காட்சியை நான் கண்டிருக்கிறன். தன் தந்தையை பிறந்த மேனியராய்க் காண்கையில் எந்த மகளால் தான் சகிக்க முடியும்.

எத்தனை தடவைகள் தான் ஒரு காணக்கூடாத காட்சி என்று விழித்தி ருக்க முடியும் என் தாயால். பொறுப்பற்ற விதமாய் என் தந்தை போதையில் மிதக்கையில் பொறுப்புணர்வோடு அல்லும் பகலும் உழைத்த என் தாய் அசதியாய் தூங்கவும் முடியாத துர்ப்பாக்கியம்.

அன்று அவள் வழமையை விட அசதியாயிருந்தாள். அறைக்குள் ஆளைவிட்டுப் பூட்டி விட்டு அயர்ந்து தூங்கிப் போனாள்.

1987 இல் அமைதி நிலை நாட்டுவதாய் நிலையெடுத்து காமவெறி தலைக்கேறி தலைகால் தெரியாது தடுமாறிய இந்திய இராணுவத்தினர் போல என் தந்தை, கட்டுக்கடங்காமல் அவர் ஏறிக் குதித்து வெற்றி வீரன்போல் கேடயம் பெற கை நீட்டுவது போல் அவளிடம் கை நீட்டியிருக்க வேண்டும்.

"சீ. . . போ மூத்தவள் படிச்சுக் கொண்டிருக்கிறாள்". 17 வயது மகள் படித்துக்கொண்டிருப்பது என் தந்தைக்குப் படாத பரிதாபம்.

இரை தவறிப்போன செந்நாயை அவர் பார்வை எனக்கு நினைவு படுத்திற்று ஏனிப்பிடி? அன்றிலிருந்து தான் நான் தோமஸ் அல்வா எடிசன் ஆனேன். சீ . . . சிக்மன் புறெய்ட் போல நானும் ஆய்வில்.

என்ன . . . என்ன . . . ஏன் . . . ஏன்?

சேவல் - பேடையை விட்டுத் துரத்துவதும், கார்த்திகை மாதத்தில் பெட்டை நாய்களின் ஒலமிடலும் - கடுவன் நாய்களின் தொங்கிய நாக்கும், தவிப்புத் கொட்டும் கண்களும், கடுவன் பூனைகளின் விசித்திரக் கதறலும்

www.tamilarangam.net

- பெட்டைப் பூனைகளின் பரிதாப ஓலமும் கவனத்திற்பட என் தந்தை தான் காரணகர்த்தாவாயிருக்க வேணும்.

எனது பல வருடத் தேடல்களுக்கு ஆவணப்பதிவாய், என் தந்தையை அப்பட்டமாய்த் தோலுரித்துக் காட்டியது. தமிழ்க்கவியின் "எனி வானம் வெளிச்சிரும்" தான்.

என் நண்பி "இனி வானம் வெளிச்சிரும்" படித்துவிட்டுச் சாடினாள். என்ன வக்கிரம் எண்டாள்.

எது வக்கிரம் யதார்த்தமா? யதார்த்தத்தை புட்டுக் காட்டியதா?

எது உண்மைக்குப் புறம்பானது என்று புலம்புகிறாள்?

என் நிலைப்பாடு அவளைப் போல சாத்தியமா சாத்தியமல்ல என்பதல்ல! சாத்தியம் என்பதைக் கண்ணாரக் கண்டவள் நான்.

என் கவனமெல்லாம் புனித உறவில் சீழ் வடிவது ஏன்? "அன்பு ஈனும் குழந்தை" என்ற வள்ளுவம் ஏன் தொலைந்தது . . .

ஒருவருக்கு ஆர்வமிகுதியாகவும் ஒருவருக்கு அருவருப்பாகவும் எப்பிடி ஆக முடியும்?

வானம் வெளிச்சிரும் பார்வதிக்கு 30 வயதில் தினவுஎடுத்ததாய் குறிப்பிட்டிருந்தாரே . . . அப்பிடியெண்டால் அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு போலவோ . . . காலம், நேரம் கணங்கள் கவனிக்கப்படல் வேணும். உணர்ச்சிகளுக்கு அடிமையானவன் அல்லன் மனிதன். உணர்ச்சிகளை வரையறுக்கத் தெரிந்தவன்தான் மனிதன்.

தமிழ் கவியை பேட்டி காணப்பிரியப்படுகிறேன். ஏனென்றால் புழுத்துப் போன புண்களுக்கு புது மருத்துவம் காணக்கூடும் என்பதனால்.

*அக்கினி.*

www.tamilarangam.net

# பாலும் சோறும் உண்ணத்தரும் அப்பா!

அம்மா முகம் தெரியா
பிள்ளை நான்!
குறைகள் அறியா
குழந்தை நான்!

பாலும் சோறும்
உண்ணத்தந்து
தோளில் தட்டி
துயிலச் செய்து
அன்பை அள்ளி
நெஞ்சில் வார்த்து
பண்பைச் செதுக்கி
பக்குவமாய் கோர்த்து
உணர்வில் கலந்து
வளர்த்த தந்தை
என் அன்புத் தந்தை!

அவர்
அன்பில் குறைகள்
கண்டதில்லை
என் மனது!
அம்மா நினைவைத்
தந்ததில்லை
அவர் அன்பு!

www.tamilarangam.net

அவர் மடிதான்
என் தொட்டில்!
அவர் மார்புதான்
என் பஞ்சணை!!

அழுவதை
அவர் ஒப்புக்
கொண்டதில்லை!
கடிந்து கொள்வதில்
உடன்பாடுமில்லை!!

நானும் ஓர் புதுமைப் பெண்
தந்தை வளர்ப்பில்
நானும் ஓர்
புரட்சிப் பெண்!!

அவர்
சித்தாந்தம் எனக்குள்
வீரத்தைத் துளிர்க்கச்
செய்தது!
புதுப் பாதை
காட்டியது!!

**செய்யது அகமட் ஸர்மினா**
தெரிவுசெய்யப்பட்ட கவிதை
சர்வதேச பெண்கள் தினம்
2002

* * * * *

www.tamilarangam.net

# நாக கன்னி–1

ஒருநாள் ஒரு கனவு அதை நான் மறக்கவும் முடியாது...

பாடல் கேட்டு மனதுள் சோம்பல் முறித்துத் தலை தூக்கும் நாகம்.

உடம்பு முழுதும் புழுதி பிரட்டி மண்சட்டியில் கல்லுப் போட்டு சோறாக்கி, நூல் நுனியில் இலைகுத்தி மீன் பிடித்து, சிரித்துக் களைத்து வீடு திரும்பிய ஒரு நாளில் கஜுº பழமும், பிஸ்கட்டும் தந்து போன என் மாமாவுடன் அதன் பிறகு ஒரு தொடர்பும் இருந்ததில்லை. மீசை முளைக் காத அவர் முகமும் சரியான மதிப்பத்தில் இல்லை. அம்மாவும், அம்மம்மாவும் குளறுவதைத் தவிர... அதுவும் பழகிப் போய் விட்டது.

மனதுள் அதே விளையாட்டுக்களும் கனவுகளில் கார்த்திக்கும் பிரசாந்தும் இனம்தெரியா இளைஞர்களும், வரத் தொடங்கிய நாட்களில் மாமா முகம் அநேகமாக மறந்தே போயிற்று அவங்கள் ஞாபகப்படுத்தும் வரை...

ஒயாகே மாமே எங்க?
என்ரை செக்கிள் காண்டிலைப் பிடித்தபடி அதட்டினான்.
தெரியாது,
ஏன்க் தெரியாது?
தெரியாது.

அதன் பிறகு எதுவுமே தெரியவில்லைதான்.
ஏன் இப்படி என்று தெரியவில்லை
சட்டம் தெரியவில்லை
உலக நீதி தெரியவில்லை.. இன்று வரை...

ஆனால் அவங்களுக்குத் தெரிந்தது. நான் பெண் என்பதும் தாங்கள் ஆண்கள் என்பதும்...

எனக்குள் முறுகி எழும் நாகம்...

உடல் முறுகி, முகம் விடைத்து, மூச்சுப் பெருத்து வர எழுகையில், மெள்ளக் கை தொடுவாள் என் சின்ன மகள்-முன்பெல்லாம் இப்பிடி எனக்குள் ஒரு நாகம் எழுந்த நேரங்களில் கை தொட்டு அமர்த்தியவனின் மகள்.

என்னை, என்ரை சிரிப்பை, எனக்குள் இருந்த மனபலத்தை விரும்பி வந்தான்

www.tamilarangam.net

எண்டு நானும் என்னுடைய அம்மாவும் அம்மம்மாவும் எவ்வளவு சந்தோசப்பட்டம். பூனையளை விட்டிட்டு எலியைப் பிழை பிடிக்கிற நம்மட கண்றாவிக் கலாசாரத்துக்குள்ளை இப்படியும் ஒருத்தனா எண்டு சந்தோசப்பட்டுப் போனன்.

பிறகுதான் விளங்கிச்சுது,

நான் பெண் என்பதும் அவன் வழக்கமான ஆம்பிளை எண்டதும்...

அடங்கிக் கிடந்த நாகம் தலைவிரித்து எழும்.

காதலில் மறந்த கதைகளெல்லாம் புதுசு புதுசாய் அவனுக்கு ஞாபகம் வந்ததும், இரண்டு வருசத்துக்குப் பிறகு பிறந்த மகள் “அவங்கள்” உடைய பிள்ளையா எண்ட சந்தேகமும்.... விஞ்ஞான விளக்கம் ஒண்டும் இல்லாமலே அவன் விட்டிட்டுப் போனதும்.. பிறகு அவன் புது மாப்பிள்ளை ஆனதும், இப்ப பழைய கதைகள்.

அவங்களுக்கு அரசு குடுத்த அதிகாரம், இவனுக்கு சமூகம் குடுத்த அதிகாரம், எனக்கு? என்னைப் போல இன்னும் ஆயிரம் பொம்பிளையளிட கதை எனக்குத் தெரியும்.

என்ரை உடம்பைப் பாவிச்சுப் போட்டுப் போன இரண்டு விதமான ஆம்பிளை யளுக்கும் எதிரா நீதி கேட்டு வழக்கு நடத்த வருடக் கணக்காய் நடக்கும் என் கால்கள், முன்பு அம்மா, அம்மம்மா உடன் வருவார்கள்.
இப்ப, கூட நடக்கிறாள் என் சின்ன மகள்.

இரண்டுக்கும் முடிவு சொல்ல முடியா முண்டமாய் சட்டம்.

என்னைத் தேடி வந்தவங்களைத் தேடி, “அதைக்” கண்டவங்களைத் தேடி, நானே கொண்டு போய் மன்றத்துக்கு முன்னாலை நிப்பாட்டி உணர்ச்சிவசப்படுகிற மாதிரிக் கதையெல்லாம் சொல்லி ஒரு முடிவு தேட, நானென்ன தமிழ்சினிமா கதாபாத்திரமா? இல்லை கண்ணகியா?

உப்புக் கரிக்கும் நினைவுகளைத் துப்பி அதில் காலூன்றி எழுந்து நின்ற என் மனபலத்தை எண்ணிப் பெருமிதமடைகின்றேன்.

எனக்குள் மறுகி எழும் நாகம் கம்பீரம் கொள்ளும்.

..... *தமலா வாசுகி*

www.tamilarangam.net

# காதல் சமாதி !

பெண்ணே!
எளிமையாய் வாழ்ந்த
உனக்கு இன்று காதல்
ஏளனம் புதிது.

காதலுக்காக இதயத்தைத்
தொலைத்து விட்டு
இன்று நீ . . .
உறவை எழுத்துக்களால்
இணைக்கின்றாய்.

மனதால் அழகான நீ
காதலால் அசிங்கப்பட்டாய்
குற்ற உணர்வோடு
தவிக்கிறாய் இன்று

கேட்டாயா?
வரம் கேட்டு கை கூப்பிய உனக்கு
வம்புக் காரியென
விளம்பரம் கூறுகிறார்கள்.

புன்னகையைத் தொலைத்த
உனக்கு
சிடுமுஞ்சிக் காரியென
திமிர்பட்டம் சூட்டியது உலகம்.

வார்த்தைகளைப் புதைத்து,
வந்த துன்பத்தைக் கூறாது
இன்னும் நீ
மௌன அனுஷ்டானம் புரிகின்றாய்

www.tamilarangam.net

இவளுக்கு "லெவல்" என்று
உலகம் கூறுகின்றது.
நெரிசலில் விரிசல்களாகி விட்டு
நெஞ்சம் குமுறியழுகின்றாய்
வந்த துயர் தீராது உனக்கு

பெண்ணே!
நீ அறிவுள்ளவளாக இருந்தும்
அறியாமையில் உன்னை
இழந்தாய்.

பறித்துக் கொண்டது காதல்
உன் வாழ்வை மட்டுமல்ல
உன் முகத்தின் முழுநிலவையும் தான்
உதிர்ந்த காதலின்
உள்ளத்தைச் சொல்லாமல்
தவித்தென்ன லாபம்?

நீ சோகச் சுமைகளோடு
விடும் பெருமூச்சு
அழுத்தியது உன்னை மட்டுமல்ல
உற்றாரையும் தான்.

உனக்குள் ஒரு பயம்
பயத்தில் ஒரு மௌனம்
உன்னில் இருந்த சிறுமியை
இழந்து குமரியானாய்
இன்று குமரியை இழந்து
மனைவியாகமலே தாயானாய்
காதல் தந்த தரித்திரம்
உன் சரித்திரத்தையே
சமாதியாக்கிவிட்டது
சும்மா விடுமா ஆண்களை
இந்தக் கொடுமை?

**தாரிகா மர்ஸூக்**

www.tamilarangam.net

# "மாலிகா அமர்ஷேக்"

இந்த தொப்புள் கொடியை
என்னால் ஏன்
அறுத்துக்கொள்ள
முடியவில்லை?

என்னுடைய வாழ்க்கையே
ஓர் ஆணுக்கு நிவேதனமாக
அமைய வேண்டுமா என்ன?
நான் ஒரு பெண்
பல பரிமாணங்களின்
சாத்தியத்துடன்
இயற்கையின் ஓர்
அடிப்படை சக்தி.
தோலையுரித்துப்
போட்டு விட்டு நகரும் பாம்பு
போல
ஒரு தவிப்பு.

**செப்ரம்பர் 2003 கணையாழியில் வெளிவந்த மராத்திய பெண் கவிஞர், எழுத்தாளர் மாலிகா அமர்ஷேக்" கின் சுயசரிதையின் சில பகுதிகளில் இருந்து நாம் சிறு பகுதியை பிரசுரம் செய் துள்ளோம்.**

தங்களுடைய திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமானது என்று சொல்லும் பெண்களில் 95 சதவிகிதத்தினர் சுத்த மாகப் பொய் சொல்லுகிறார்கள். தங்க ளைப் பற்றிய ஏதாவது கருத்து-தகவல் தெரிவிக்க வேண்டும் என்ற பிரக்ஞை உள்ள பெண்களை மட்டுமே இங்கு கணக்கில் எடுக்கிறேன்.

நகரமோ, கிராமமோ, பங்களாவோ, குடிசையோ- எங்கு பார்த்தாலும் பெண் ஒரே கட்டத்தில்தான் இருக்கிறாள். பேச முடியாது வாய் மூடி, குழப் பம் மேலிட்டு, எல்லாவற்றையும் சகித்து, மன்னித்துக்கொண்டு கெட்டழியும் ஆண்களின் செல்வாக்கே ஓங்கியிருக்கும் இச்சமூகத்தில்., தன்னுடைய ஆளுமையைக் குடும்பம் என்ற கோட்பாட்டு பலிபீடத்தின் முன் இழந்து கொண்டும், தானாகவே அழித்துக்கொண்டும் அவள் மடங்கிச் சுருங்கிப் போகிறாள்.

உண்மை இதுதான். பெண்களின் பிரச்சினைகளை இங்குள்ள அரசியல் சடுகுடு விளையாட்டால் சீர் செய்ய முடியாது. அரசியல்வாதி அவனுடைய கவலை. அவன் கட்சிக்கு ஆதாயம் என்றுதான் போய்க் கொண்டிருப்பான். ஆண்களோ பெண்களின் முன்னேற்றம். பெண்கள் சம்பந்தப்பட்டது என்பதால் அவர்கள் மட்டுமே (தங்கள் பங்கீடு இன்றி) அதில் முனைய வேண்டும் என்று நினைக்கின்றனர்.

www.tamilarangam.net

பெரும்பாலான பெண்களால் வீட்டை விட்டு நகருவதே பெரும்பாடாக இருக்கும்போது, மற்ற பெண்களுடன் முறையாக உரையாடுவது எப்படி சாத்தியப்படும்? சராசரி ஆணுக்கோ, பெண்ணின் உடலைத் தாண்டி, பெண்ணைப் பற்றிய மற்றைய தீவிர பிரக்ஞை, அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. என்னுடைய கணிப்பில் பெண்ணிய இயக்கத்தில் இவ்விரண்டும் மிக பலவீனமான இணைப்புக்கள்.

நமது சமூகத்தில் ஆணின் செருக்கு ஓர் அசாதாரண, ஊழலான, வீம்புத்தனமான அம்சம். அதற்கு மேலே பெண்களே ஊட்டமான உரமிட்டு அதை வளர விடுகிறார்கள். ஒரு மரமே கோடரிப் பிடி செய்வதற்கு தனது கிளையை மரம் வெட்டியிடம் கொடுத்த கதை எனக்கு நினைவுக்கு வருகிறது.

"வெற்றியடைந்த ஒவ்வொரு ஆணுக்குப் பின்னே ஒரு பெண் இருக்கிறாள்." என்ற சொல் வழக்கை நான் அழித்து விட விரும்புகிறேன். ஆணும், பெண்ணும் இயற்கையின் இரு படைப்புகள். இருபரிமாணங்கள் இரண்டுமே முழுமையானவை அல்ல. ஆனால் ஒத்த திறன் படைத்தவை.

**சிந்திக்கவல்ல. தனித்துவம் வாய்ந்த மூளை அவனுக்கும் இருக்கும் போது, ஒரு பெண் ஆணின் மேலாதிக்கத்தை அநுமதிக்கும் வண்ணம் தன்னைத் தன்னுள்ளேயே ஏன் இப்படி சுருட்டி வைத்துக்கொள்ள வேண்டும்?**

**தமிழாக்கம் - வீ. விஜயராகவன்.**

நன்றி
செப்டம்பர் கணையாழி



www.tamilarangam.net

# பெண்களை அறிதல்

(வீதி நாடகம்)

**இவ் வீதி நாடகம் மகளிர் தினத்தை முன்னிட்டு, மெரயா தமிழ் வித்தியாலய ஆசிரிய - மாணவ கூட்டுறவினால் தயாரிக்கப்பட்டு அக்கரப்பத்தனை லிந்துலை பிரதேச தோட்டங்களில் அளிக்கை செய்யப்பட்டது.**

பெண்கள் சமூகத்தில் படும் அவலங்களையும், இம்சைகளையும் அவர்களுக்கே தெரியாமல் அவர்கள் அடக்கப்பட்டுள்ள முறையையும் எடுத்துக்காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் மாணவர்களுடன் கலந்துரையாடி தயாரிக்கப்பட்ட இந்நாடகம் ஐந்து தோட்டங்களில் அளிக்கை செய்யப்பட்டது.

நடிகர்கள் (பாடலைப் பாடிக்கொண்டு குறித்த இடத்துக்குச் சென்று வட்டமாக நிற்பர் - மற்றவர்களுக்கு தெரியக்கூடிய விதத்தில் குந்தியும் இருக்கலாம்)

*பெண்கள் அனைவரும் வாருங்கள்*
*எம் நிலையை வந்து பாருங்கள்*
*தலை குனிந்து நடந்தோம்*
*அடிமைப்பட்டுப் போனோம்*

(பெண்கள் . . .)

*வீழ்ந்து கிடக்கும் எமக்கு விடிவு கிடைக்கவேண்டும்*
*ஆடுவோம் - பாடுவோம் - போராடுவோம்*
*கூடிக்கேட்க நீங்கள் ஒன்று சேர்ந்துவாரீர்*
*தலை நிமிர்ந்து நடப்போம்*
*மனிதர் என்று சொல்வோம்*

(பெண்கள் . . .)

*சம உரிமை கேட்டு அதையும் இங்கு வெல்வோம்*
*கூடுவோம் - கோருவோம் - போராடுவோம்*
*கூடிக் கேட்க நீங்கள் குடும்பத்தோடு வாரீர்*
*அடக்கப்பட்டு வீழ்ந்தோம்*
*அடிபணிந்து வாழோம்*

(பெண்கள் . . .)

பெண் 1 :- பெண்களுக்கு உரிமை வேணும்
சொந்தமா தீர்மானம் எடுக்க, சுதந்திரமா நடமாட வழிவேணும்

www.tamilarangam.net

ஆண் 1 :- (சிரிப்புடன்) இது கிண்டல்
நாங்க உங்கள அடக்கல்ல

ஆண் 2 :- ஆமா . . . நாங்க உங்கள அடக்கியா வச்சிருக்கம்

பெண் 2 :- தெரிஞ்சோ . . . தெரியாமலோ,
அடக்கித்தான் வச்சிருக்கீங்க

பெண் 3 :- (நிமிர்ந்து நடந்து வருதல்)
இப்படியே வருவீங்க
பெண் புத்தி பின் புத்திம்பீங்க

பெண் 4 :- அது மட்டுமா சொல்லுறீங்க
பொம்பள சிரிச்சாப் போச்சி போயில விரிச்சாப் போச்சிண்டு
எங்கள சிரிக்கவிடுறதே இல்ல

பெண் 5 :- (சோகத்துடன்) எனக்கொரு தங்கச்சி பொறந்திச்சா
எங்கப்பா முகத்த பாக்கணுமே
(பெண் 2 சுருங்கிய முகத்துடன் நிற்றல்)
இந்தா இதுமாதிரி சுருங்கிப் போச்சி
பொறகு தம்பி பொறந்தான்
எப்பிடி சந்தோஷப்பட்டாரு தெரியுமா?

பெண் 3 :- கற்கண்டு குடுத்தாரா?
பெண் 5 :- அத ஏன் கேட்குற . . . ஆடிப்பாடாத குற
பெண் 6 :- இப்பெல்லாம் பொம்புளப் புள்ளன்னா
சின்னதுல இருந்தே பாகுபாடு பாக்கத் தொடங்கிட்டம்

பெண் 4 (அம்மா) பெண் 7 (மகள்) ஆண் 3 ( (அப்பா) ஆண் 6 (மகன்) பாவனை பண்ணி நடித்தல்)
(மகனும் மகளும் ஓடிப்பிடித்து விளையாடுதல்)

www.tamilarangam.net

ஆண் 3 :- ஏய் . . . நீ பொம்பளப்புள்ளதானே
(அப்பா) அவனோட சேந்து ஆடிக்கிட்டிருக்க

பெண் 4 :- இவள் இப்பிடித்தான்
(அம்மா) பயலுகளோடதான் ஆடுறது
இப்பவே அடக்கினாத்தான் சரி

(ஆண் 3 ஏசி மகளை அடித்தல்)
(அப்பா)

ஆண் 3 :- உள்ளுக்குப் போ
(அப்பா) அம்மாவோட சமைக்கப்பழகு

பெண் 7 :- பொம்புளன்னா அடிப்பீங்க . . .
(மகள்) ஆம்புளன்னா கொஞ்சுவீங்க . . .

பெண் 8 :- இப்பிடித்தான்
பொம்புளப்புள்ளய்க்கும் ஆம்புளப் பயலுக்கும்
பாகுபாடு பாக்கத் தொடங்கித்தம்
(மகளிடம் கேட்டல்)
சரி ஆம்பளன்னா என்ன நினைக்கிறீங்க
(மக்களிடம் பதிலை எதிர்பார்த்தல்)

பெண் 1 :- பொம்புளன்னா என்ன நினைக்கிறீங்க
(மக்களிடம் பதிலை கேட்டல்)
(கேட்டவற்றை தொகுத்துக் கூறல்)

பெண் 3 :- ஆண் எண்டா வீரமானவன் - தைரியசாலி
பலசாலி - புத்திசாலி - எங்கையும் போகக்கூடியவன்
பெண் எண்டா அடக்கமா இருக்கிறவள் - அமைதியா இருக்கிறவள்.
பயப்படுறவள் - சமைப்பவள் இதையெல்லாம் பிரிச்சது யாரு?
(மக்களிடம் கேட்டு தொகுத்துக் கூறல்)

www.tamilarangam.net

பெண் 9 :- அம்மா - அப்பா, தாத்தா - பாட்டி, அவங்கட அப்பா - அம்மா இவங்கெல்லாம் ஒரு சமூகம்.
(நடுவில் உள்ள ஆண் 4 ஐ காட்டி)
சமூகந்தான் ஆணையும், பெண்ணையும் பிரிச்சது.
(பெண் 9 பாடத்தொடங்க எல்லோரும் பாடுதல்)
ஆணையும் பெண்ணையும் பிரிச்சாங்க
பெண்ணையும் வீட்டுல அடச்சாங்க
வீடுதான் உலகம் எண்டு சொல்லி
அவ வாழ்க்கயில மண்ணள்ளிப் போட்டாங்க - 2

ஆண் 4 :- (ஆடிக்கொண்டு உரத்துப்பாடுதல்)

*ஆணையும் பெண்ணையும் பிரிச்சேனே*
*பெண்ணையும் வீட்டுல அடச்சேனே*
*வீடுதான் உலகம் எண்டு சொல்லி*
*அவ வாழ்க்கையில் மண்ணள்ளிப் போட்டேனே - 2*

நான்தான் ஆண் எண்டா இப்பிடி இருக்கணும்.
பெண் எண்டா எப்பிடி இருக்கணும்னு பிரிச்சன்
பொம்புளன்னா வீட்டிலதானே இருக்கணும்.

பெண் 10 :- ஆமா வாழ்க்கையில மண்ணள்ளித்தான் போட்டாங்க . . .
நான் நல்லாப் படிச்சன் வகுப்புல நான்தான் முதலாம் பிள்ள

ஆண் 6 :- ஆமா . . . ஆமா . . . எங்கட வகுப்புல இதுதான் மொதலாம் புள்ள

பெண் 10 :-ஆனா பாவிமகன் தம்பி பொறந்தானே
என்னைய வீட்டுல நிப்பாட்டிட்டாங்க
அவனைப் பாத்துக்கணுமாம்

ஆண் 2 :- அவங்கப்பா செஞ்சதுல என்ன தப்பு
பொம்புளயளுக்கு புள்ளயப்பாக்குறத விட
வேறென்ன வேல . . .
(மக்களிடம் கேட்டல்)

www.tamilarangam.net

ஆண் 4 :- வேல இருக்கு
உடுப்பு கழுவணும், சமைக்கணும், பாத்திரங்கழுவணும், அதோட . . . புள்ளயவும் பாத்துக்கணும்.

பெண் 11 :- இந்த மாதிரி நீங்க சொல்லுறதாலதான
அடுப்பங்கரையே ஆபீசாவும், ஆப்பக்குச்சியே பேனாக் குச்சாகவும் பல பெண்களோட வாழ்க்க அடுப்பங்கரையிலேயே பொகஞ்சி போச்சி

ஆண் 3 :- ஏய் கொஞ்சம் இரு
அப்ப நீ எங்களயா சமைக்கச் சொல்லுற

பெண் 11 :- நீங்களுந்தானே சாப்புடுறீங்க சமைச்சா என்ன?
உதவியாவது செய்யலாந்தானே

ஆண் 3 :- நீ கை நீட்டிக்கதைக்குற
(பதுங்கி வந்த ஆண் 1)

ஆண் 1 :- என்னா அண்ணே பொம்புள கைய நீட்டிக் கதைக்குறா பாத்துத்து இருக்குறீங்க

(ஆண் 3, பெண் 11 அடித்து துரத்துதல்)

பெண் 1 :- நாள் முழுக்க கஸ்டப்படுறது பொம்பள.
சமைக்குறதுக்கு கொஞ்சம் உதவி செஞ்சா என்ன?

(மக்களிடம் கேட்டல்)

ஆண் 1 :- இந்த அண்ணன் சொல்லுறாரு
உதவி செய்யக்கூடாதாம்

பெண் 7 :- இவங்க சொல்லுறாங்க
உதவி செய்யலாமாம்

(பெண் 2 வீட்டைக் கூட்டுவது போல நடுவில் பாவனை செய்துகொண்டிருக்க ஆண் 5 (குடித்தது போல தள்ளாடி வருதல்)

www.tamilarangam.net

ஆண் 5 :- பாலும் பழமும் கைகளில் ஏந்தி
பவள வாயில்
(வாயைத் துடைத்து விட்டு)
எச்சிதான் வருது

ஆண் 5 :- ஏய் . . . ஏய் . . .

பெண் 2 :- ஏன் இங்கதான் இருக்கன்

ஆண் 5 :- அப்ப நான் போய் சுத்தித்து வாறங்குற
என்ன கறி வச்சிருக்கிற

பெண் 2 :- சாம்பாறு கறி

ஆண் 5 :- சாம்பாறு - கறியா, நேத்தும் அதுதானே

பெண் 2 :- சாமான் வாங்கிக் குடுத்தாத்தானே கறிவைக்க

ஆண் 6 :- அண்ணே நானும் பாத்துக்கிட்டுத்தான் இருக்கன்
உன்ட பொஞ்சாதி எந்த நாளும் சாம்பாறு வச்சி ஊத்துறா
எண்ட பொஞ்சாதிய பாரு கோழிக்கறி வச்சி ஊட்டி விடுறா

ஆண் 5 :- ஏன்டி . . . எல்லொரும் என்னக் கேவலமா பேசுறான். ஒடு
உங்க அம்மா வீட்டுக்கு
(அடித்துத் துரத்துதல்)

பெண் 1 :- பெண்கள வீட்டுல அடக்கி வச்சிருக்கம்
அங்ககூட நிம்மதி இல்ல

(நடுவில் பெண் 9 சமைத்துக்கொண்டும்; பெண் 7 சமையலுக்கு உதவி செய்துகொண்டும்; ஆண் 2 படிப்பது போலவும் பாவனை பண்ண ஆண் 1 வருதல்)

ஆண் 1 :- மகன் எங்க.

பெண் 9 :- உள்ள படிச்சித்து இருக்கான்.

www.tamilarangam.net

ஆண் 1 :- டேய் என்னடா பண்ணுற, டவுனில மியூசிக் குரூப் அடிக்கிறாங்க - எல்லாரும் துள்ளிக்குதித்து ஓடுறானுக. நீ உள்ளுக்கே கிடக்குற

ஆண் 2 :- அடுத்தகிழமை எக்ஸாம் இருக்குப்பா

ஆண் 1 :- பொம்பளமாதிரி உள்ளுக்கே கிடக்காம வெளியில போய் நாலு இடம்பாரு போடா . . . போ

பெண் 7 :- அம்மா . . . அம்மா . . . நானும் போறம்மா
அம்மா நானும் போறன்

பெண் 9 :- நீ முதல்ல சமைக்கப்பழகு
வெளியில ஆடப்போறாவாம்

பெண் 1 :- பாத்தீங்களா பொம்புளப்புள்ளயள வீட்டிலயே அடச்சிப்போட்டு றாங்க வீடுதான் அவளுக்கு உலகம்

பெண் 12:- எங்கயும் அனுப்புறதில்ல அனுப்பினாலும்
(கூட்டத்திலிருந்து சிறுபையனைப் பிடித்தல்)
இப்படி ஒரு குட்டித்துணை பின்னுக்கே வரும்

பெண் 5 :- ஸ்கூலுக்கு மட்டுந்தான் போகச் சொல்லுவாங்க
அங்க போக்குள்ளயும் நாலுபேர் ரோட்டில நிண்டு
ஸ். . . ஸ். . . அது இதுண்ணு சொல்லி கிண்டல் பண்ணுவாங்க

பாடல் :- கிண்டல் பண்ணுவாங்க சிலரு
ரோட்டில் பெண்களை இழிதல் - அவர்களின் தொழிலே
(கிண்டல்)
பெண் பித்து பிடித்து அலைவார்
ரோட்டில் பெண்களைக் கண்டதும்
எச்சிலை வடிப்பார்
(மூன்று பெண்கள் செல்வதுபோலவும்; இரு ஆண்கள் கிண்டல் பண்ணுவது போலவும் காட்சியமைத்தல்)
(பெண் 9 வீட்டுவேலையுடன் நிற்றல்_ பெண் 9 வருதல்)

www.tamilarangam.net

பெண் 8 :- அம்மா . . . அம்மா . . .

பெண் 9 :- வாம்மா . . . இப்பத்தான் வர்றியா?

பெண் 8 :- ஆமாம்மா அப்பா எங்க

(ஆண் 6 வருதல்)

பெண் 8 :- அப்பா நாங்க ஸ்கூலுக்கு போற நேரமும் வாற நேரமும் ரெண்டு, மூனு பசங்க அது இதுண்ணு கிண்டல் பண்றாங்க.

ஆண் 6 :- நான் அண்ணைக்கே சொன்னன் கேட்டாளா இவ. படிக்கட்டும்னு அனுப்புனா இப்ப என்ன ஆச்சி. இது சரிவராது. இனி மேல நீ ஸ்கூலுக்கு போகாத

(பெண் 8 போவேன் என அடம்பித்தல்)

பெண் 1 :- இப்படித்தான் யாரோ கிண்டல் பண்ண புள்ளய நிப்பாட்டித் தாங்க. இதுதான் எந்த நாளும் நடக்குது. இத இப்படியே விடுறது சரியா. இத எப்படி மாத்துறது.

பெண் 6 :- இத நான் மாத்துறன் பாருங்க

(பெண் 6 உடன் இன்னமும் இரு பெண்கள் செல்லல். இரு ஆண்கள் கிண்டல் பண்ணல் பெண் 6 அவர்களை ஏசி செருப்பைக் கழற்றுதல்)

பெண் 1 :- இந்த தங்கச்சி செய்தது சரியா.

(மக்களிடம் கேட்டல்)

எல்லாத்துக்கும் இது தான் தீர்வு இல்ல
ஒவ்வொரு பிரச்சினையும் நல்லா யோசிச்சு
நாமளே தீர்மானம் எடுக்கணும்
நமக்கு மேல எவ்வளவு பாரம் இருக்குண்டு
நமக்குத் தெரியணும்

(இரு பெண்களை மாடுகளாக்கி மாட்டுவண்டி ஓட்டுவது போல ஆண் 5 ஓட்டிக்கொண்டு வருதல்)

www.tamilarangam.net

ஆண் 5 :- இவங்கள இப்படித்தான் அடக்கி வைக்கணும்
இல்லாட்டி நம்மதான் உடுப்புத்துவைக்கணும்
சமைக்கணும், பொம்பள காலுக்கு கீழதான் கிடக்கணும்
இதுகள மேச்சதில நான் களைச்சிட்டன்
ஏய் . . . ஏய் . . . எங்க போய்த்த

பெண் 12:- வந்துட்டேங்க

ஆண் 5:- என்னடி பண்ணுன இவ்வளவு நேரம்

பெண் 12:- உடுப்புக் கழுவுனனுங்க

ஆண் 5:- சரி டீ கொண்டுவா
(டீ கொண்டுவந்து கொடுத்தல்)

ஆண் 5:- என்னடி இது . . . தண்ணிமாதிரி இருக்கு
(அடித்தல்)

பாடல் :- எம்மினமே எம்சனமே நீங்கள் சிந்திக்கும் நேரம் இது
பெண்களுக்கு சம உரிமை தந்திடும் காலமிது
(எம்மினமே)

பெண் 7 :- நாமெல்லாம் யோசிக்கணும்
நம்மகிட்ட எவ்வளவோ சக்தி இருக்கு
அதெல்லாம் வெளிப்படுத்தணும்

பெண் 9 :- ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னால இருக்கும்
பெண், முன்னுக்கு வரணும்

பெண் 1 :- பெண்கள் நிலம இப்படித்தான் இருக்கு
இதுக்கெல்லாம் முடிவு தேவ

பெண் 12 :- நாங்களே எந்த நாளும் உழைக்க ஏலாது
எங்களுக்கும் விடுதல வேணும்

www.tamilarangam.net

பெண் 8 :- அந்த முடிவ நீங்களே சொல்லுங்க
(மக்களின் கருத்துக்கு இடம்விட்டு சிறிது நேரம் அமைதியாக நிற்றல்)

பாடல் : எழுந்திடு... துணிந்திடு... நிமிர்ந்திடு -2
அடிபணிந்து வாழ்வதோ
அடங்கிப்போவதோ
பெண்கள் வீட்டினுள்ளே அடங்கிப்போவதோ
பெண்களுக்கு சம உரிமை கொடுக்க மறுப்பதோ
(எழுந்திடு)
கையிலென்ன விலங்கோ சொல்
............
பெண்கள் இனி உயர்வென்று
உறுதிகொள் இனமே
போன காலங்கள் போகட்டும்
எழுந்திடு...... துணிந்திடு.... நிமிர்ந்திடு

## நடிகர்கள்

பெண் - 1 : க. கோகிலவாணி
பெண் - 2 : விக்னேஸ்வரி
பெண் - 3 : சந்திரமதி
பெண் - 4 : சிசிலம் குயின்
பெண் - 5 : லூட்ஸ்மேரி
பெண் - 6 : மெரீனா
பெண் - 7 : கு. சசிகலா
பெண் - 8 : அ. லோகேஸ்வரி
பெண் - 9 : சந்திரோதயமேரி
பெண் - 10 : புகுந்தமலர்
பெண் - 11 : ஏஞ்சலின்மேரி
பெண் - 12 : சுபா



ஆண் - 1 : இராமச்சந்திரன்
ஆண் - 2 : கோபிநாத்
ஆண் - 3 : பிரதிபரன்
ஆண் - 4 : ச. தியாகசேகரன்
ஆண் - 5 : ரமேஸ்குமார்
ஆண் - 6 : யோகராஜா

www.tamilarangam.net

# மடல் விடு தூது

*"ஊருக்குத்தானடி உபதேசம் உனக்கல்லடி கண்ணே" எனச் சிலர், பல உரிமைப் போராட்டங்களிலும், அதற்கென வேலை செய்யும் நிலையங்களிலும் ஈடுபாடோ, உள் வாங்குதலோ இன்றி கொள்கைப் பரப்பாளராக, சம்பளம் பெறும் ஊழியராக மட்டும் இயங்குவது கண்கூடு. இத்தகை யோரால் பல சமயங்களில் நோக்கம் கை கூடாமல் உண்மை நிலை உணரப்படாமல் நியாயமான கோரிக்கைகளை முன்னெடுக்கும் போராட்டங்கள், பலரின் எதிர்ப் பையும், தோல்விகளையும் சந்திக்க வேண்டி ஏற்படுகிறது. அந்த வகையில் பெண்ணியம் என்பது காரியம் முடிந்ததும் கழட்டி வைக்கும் பொருள் அல்ல. "பெண்ணிலை வாதம் என்பது எமது அன்றாட வாழ்க்கை" என்றே நாமும் கூறுவதால் சகோதரியின் மடல் விடு தூது ஆக்கத்தின் சில பகுதிகளை பிரசுரிக்கின்றோம்.*

அன்பின் தோழிக்கு!

நலமறியும் ஆவலுடன் என் மடலைத் தொடர்கிறேன்... தோழி! நீ அருகில் இருப்பவளானாலும், சில விடயங்களைக் கதைப்பதைக் காட்டிலும், எழுத்தில் தருவது நல்லதாய்ப்படுகிறது. எனக்கு.

தோழி! உன் சொல்லுக்கும், நடத்தைக்கும் இடையே பெருத்த இடைவெளியைக் காணுகிறேன். சொல்வது போல் வாழவேண்டும். அல்லது நடைமுறைக்குச் சாத்தியப்பாடான விடயத்தினைச் சொல்ல வேண்டும். ஆனால்.. நீ?...

மேடைகளில்... பத்திரிகைகளில். பெண்ணுரிமை, பெண்ணியம் பற்றி முழங்கும் உன் ஓசை: வீட்டினுள் எப்படி?.. விட்டுக் கொடுப்பிற்கும், காலில் கட்டுப் போட்டுக் கொள்வதற்கும் கூடவா பேதம் தெரியாது உனக்கு?.

தோழி! படிப்பறிவு இல்லாத பாமர மக்களிடையே கொஞ்சம் இறங்கி வா! இங்கே எத்தனை பெண்கள் சமத்துவத்தை- அந்தப் பதத்தின் அர்த்தம் தெரியாமலே சுகமாய் அனுபவிக்கிறார்கள் என்பதையும். ஆற்றப் படாத ரணங்களுடன் நடைப் பிணங்களாய் எத்தனை பெண்கள் உலவித்திரி கிறார்கள்-என்பதையும் இங்கே காணலாம்.


www.tamilarangam.net

தோழி! பெண்ணியம் என்பது, ஆண்களுக்கு எதிரானது அல்ல!. பெண்கள் மீதான அடக்கு முறைக்கு எதிரானது. “பெண்ணியம் அன்று எமது வாழ்க்கையாய் இருந்தது. என அம்பை சொன்ன வாசகம் தான் நினைவில் வருகிறது. ஆம்! பெண்ணியம் என்பது வெறுமனே கோட்பாடாக இருப்பதில் பயன் இல்லை. அது செயல் வடிவம் பெற வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?..

எமது பயணங்கள் பயங்கரமானவை என்பதற்காக, பயந்து குந்தி விடவோ அல்லது... அனைத்தையும் தூக்கி எறிந்து விட்டு வீராப்புப் பேசவோ வேண்டாம். நிதானமாய், நம் சொற்கள் ஒவ்வொன்றும் செயல் வடிவம் பெறட டும்... பெறவேண்டும்.

பல தடவை என் மடலை நிதானமாய்ப் படி, உண்மை நிலையினை நீயாக உணர்ந்து கொள்வாய். இம் மடல் ஒரு சிந்தனையின் முடிவு அல்ல... அதன் ஆரம்பம் மட்டுமே. ஆகவே... சிந்தித்து, செயலில் இறங்கு!

உன் பதில் வேண்டி விடை பெறும் இவள்-தோழி



*எஸ். சுதாகினி.*

* * * * *

www.tamilarangam.net

# வாசகர் பக்கம்

நு/ மெரயா தமிழ்
வித்தியாலயம்,
09-07-03

ஆசிரியர்,
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,
மட்டக்களப்பு.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

நீங்கள் வெளியிடுகின்ற பெண் சஞ்சிகையும், அதனுடன் வரும் செய்தி மடலும் எங்கள் பாடசாலைக்கு அனுப்புகின்றீர்கள். இவ்விரண்டும் எங்கள் பாடசாலைக்கு ஒவ்வொரு மாதமும் வந்து சேர்கிறது. அதற்காக உங்களிற்கு நான் முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பெண் என்ற வார்த் தைக்கே மதிப்பில்லாத இக்காலத்தில் பெண்ணும் மற்றைய மனிதனைப் போல் உருவானவள், அவளுக்கு இரும்பினாலோ வேறு உலோகத்தினாலோ, உடலங்கங்கள் அமையவில்லை, அவளுக்கும் இந்நாட்டில் சம உரிமை உண்டு என்ற பலகருத்துக்களை வலியுறுத்தி இச்சிவபூமியில் உதயமாகியுள்ள இப் பெண் சஞ்சிகையை நாங்கள் பார்த்தபோது எமக்கு மிகவும் மகழ்ச்சியாய் இருந்தது.

இச் சஞ்சிகையில் உள்ளடங்கியுள்ள நாடகம், கவிதை, கட்டுரை, வில்லுப்பாட்டு, ஆசிரியரின் கருத்துக்கள் பொன்ற பல்வேறு விடயங்கள் நாங்கள் பார்த்தப் போது அவை எமக்கு மிகவும் பயன்தரக் கூடியதாய் அமைந்தது. அரசியலினால் ஒரு பெண் எவ்வாறு பாதிக்கப்படுகிறாள். சீதனக் கொடுமையினால் ஒருபெண்ணின் வாழ்க்கை அந்தரங்கம் ஆகும் நிலை, வறுமைச் சூழல், அதனால் பெண் அனுபவிக்கும் இன்னல்கள், பெணகளை காட்சிப் பொருளாகவும், மோகப்பொருளாகவும் பயன்படுத்தப் படும் நிலை போன்ற பெண்களைப் பற்றிய பல்வேறு விடயங்களை இப்பெண் சஞ்சிகையின் மூலம் எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

இச் சஞ்சிகையை வாசிக்கும் ஒவ்வொருவரும் நாம் ஏன் இன்னும் அடிமைகளாகவும் கோளைகளாகவும் இத் தரணியில் வாழ வேண்டும் “ஆணுக்குப் பெண் சரிநிகர் சமம்”, “மாதர் தம்மை இழிவு செய்யும் மட மைதனை கொளுத்துவோம்” என்று கோளைகளாக வாழும் பெண்களுக்கு இச் சஞ்சிகை ஒரு துணிவை ஏற்படுத்திவிடும். பெண்களின் அடிமை நிலையையும், அவல நிலையையும் மீட்டு அவர்களுக்கு ஒரு விடிவை ஏற்படுத்திக் கொடுக்கப் போகும் பெண் சஞ்சிகை மென்மேலும் வளர்ந்து ஒரு முதலிடத்தை பெற என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
G. கோகிலவாணி
தரம் - 11$^{A}$.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மஷூறா மன்ஸில்,
மெயின் வீதி,
சம்மாந்துறை,

சகோதரி,

பெண்களின் பிரச்சினை சமூகத்தில் பெண்களுக்கு மட்டுமேயான பிரத்தியேகப் பிரச்சினை என்று நான் கருதவில்லை. பெண்கள் பிரச்சினை ஒரு முழுச் சமூகப் பிரச்சினையென்றே கருதுகிறேன். புரையோடிப்போன எத்தனையோ சமூகப் பிரச்சினைகள் ஆறும்போது எமது பிரச்சினைகளும் இயல்பாகவே இருக்கும். ஆனால் பல பிரச்சினைகள் பெண்கள் மீது அதிக அழுத்தத்தை தருகிறது. அவற்றை நீக்குவதற்கு பெண்களாகிய நாம் மட்டுமல்ல மொத்த சமூகமுமே உழைக்க வேண்டும் அதனால் ஏற்படும் பலனையும் பெண்கள் மட்டும் அனுபவிக்கப்போவதுமில்லை.

சகோதரி,

இத்துடன் என் இரு கவிதைகள் இணைத்துள்ளேன் . "பெண்" இதழ் எனக்குத் தொடர்ச்சியாக வேண்டும்.

தங்களால் வெளியிடப்பட்ட "உயிர்வெளி" கவிதைத் தொகுதி பற்றி கேள்விப்பட்டேன். அதன் பிரதியொன்றை நான் பெற்றுக்கொள்ள முடியுமா?

அன்புடன்
மஷூறா

* * * * *

மங்கையர்க்கரசியார்
மகளிர் இல்லம்,
மட்டக்களப்பு.

வெளியீட்டுப்பிரிவு இணைப்பாளர் அவர்களுக்கு,

எமது மங்கையர்க்கரசியர் மகளிர் இல்ல பிள்ளையின் (போட்டிக்கான) கட்டுரையை தாங்கள் இனம் கண்டு கருத்து நோக்கி சான்றிதழ் வழங்க தெரிவு செய்தமைக்காக எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் கருத்துப்படி மேற்படி கட்டுரை தொகுக்கப்பட்டு தங்கள் சஞ்சிகைகளில் தொடராக வெளியிட இருப்பதாக எழுதியிருந்தீர்கள் மேற்படி செயல்ப்பாடுகள் வருங்கால சமுதாயமான இப்பெண் பிள்ளைகளை உற்சாகப்படுத்தி சமுதாயத்தில் பெண்கள் மேம்பாட்டுக்காக கருத்துக்கூற, செயல்பட உற்சாகமளிப்பதாகவே அமையும். தங்கள் சமுதாயப் பணிகட்கு எமது வாழ்த்துக்கள் நன்றி.

சேவையிலுள்ள,
சி. ஆலால சுந்தரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# வருடாந்த சந்தா – பெண்

**ஐரோப்பா, வட அமெரிக்கா,**
**அவுஸ்திரேலியா**
USS 5
**இந்தியா**
ரூபா 300.00
**இலங்கை**
ரூபா 100.00

**சந்தா விண்ணப்பம் 200..............**
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்**

பெயர் : ..................................................................
விலாசம் : ..................................................................
திகதி : ..................................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத் தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.


சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல:20, டயஸ் வீதி,

மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Develpoment Centre,**
**No:20, Dias Lane,**
**Batticaloa,**
**Sri Lanka.**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



நான் சந்தோஷமா, மனதளவில் இதைச் செய்கிறேன்.
எந்தப் பிள்ளையும் என்கைபட்டு இறந்ததில்லை.
அந்த ராசியை கடவுள் எனக்கு தந்துள்ளார்.

-அப்புகர் நல்லம்மா-

ISSN - 1391 - 6122

கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்